# தமிழ் தீபம்



1995

இந்துக் கல்லூரி
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

வித்தைகளருளும் வித்தக விநாயகா
எத்தனையிடர்கள் வந்திடினும் - உன்
கழலடி பணிந்தோம் காப்பாய் நீயே !

முத்தமிழே, முக்கனியே,
மூதறிஞர் காத்த முதலுருவே - இள
முத்துக்கள் தரும் ஏடு
முதலில் உனக்குச் சமர்ப்பணம் !

கற்றவரே, களங் கண்டவரே - எமைப்
பெற்றவரே, ஆதரவு உற்றவரே,
ஆசிரியரே, அருமை ஆதரவாளரே
ஆசிகள் நல்கும் பெரியோரே,
உங்களுக்கும் சமர்ப்பிக்கின்றோம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே

✿

சூழ்கலி நீங்கித் தமிழ்மொழி ஓங்க
துலங்குக வையகமே
தொல்லை வினைதரும் தொல்லை அகன்று
சுடர்க தமிழ் நாடே

✿

ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே
எங்கள் தமிழ்மொழி, எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே

✿

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே
வான மறிந்த தனைத்தும் அறிந்திடும்
வளர் மொழி வாழியவே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துக் கல்லூரி
தமிழ் மாணவர் மன்றம்
பெருமையுடன் வழங்கும்

# முத்தமிழ் விழா '95'

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு. பா. சி. சர்மா (கல்லூரி முதல்வர்) |
| முதன்மை விருந்தினர் | : | பேராசிரியர் சி. பத்மநாதன் (துணைத் தலைவர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, வரலாற்றுத்துறைப் பேராசிரியர் பேராதனைப் பல்கலைக்கழகம், உபதலைவர் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அங்கத்தவர் தேசியகல்வி ஆணைக்குழு) |
| சிறப்பு விருந்தினர் | : | திரு. பழனியப்பச் செட்டியார் (தர்மகர்த்தா, ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோயில்) |
| இடம் | : | புதிய கதிரேசன் மண்டபம் பம்பலப்பிட்டி |
| காலம் | : | * 06-10-1995<br>* வெள்ளிக்கிழமை<br>* பி. ப. 3.00 மணி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதன்மை விருந்தினரின் வாழ்த்துச் செய்தி

*கற்க கசடறக் கற்பவை*
*கற்றபின் நிற்க அதற்குத் தக.*

"கல்வியின் பயன் அறிவும், அறிவின் பயன் ஒழுக்கமுமாம்" என்ற இந்துக்களின் மரபு வழியான கருத்தைச் சென்ற நூற்றாண்டிலே நாவலர் பெருமான் சைவர்களுக்கு வற்புறுத்திச் சொன்னார். ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலான வரலாற்றினைக் கொண்ட தமிழ் இலக்கியத்தில் இழையோடுவதும் இதுவே. "தொல் குடிப் பிறந்த பல்லோருள்ளும் மூத்தோன் வழி என்னாது அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்" என்பது சங்கப் புலவர் மாங்குடி மருதனாரின் வாக்கு. இன்னா கடிந்து அறம் தெரிந்து வையத்து வாழ்வாங்கு வாழுதல் உய்விற்கான நெறி என்ற உணர்வினைப் பயத்தலால் கல்வியே செல்வங்களுள் மேலானது என்பது திருவள்ளுவர் சிந்தனை. சிவத்துடன் சேருவதற்கு ஏதுவானது ஞானபோதம் என்பது சைவசித்தாந்த சாத்திரங்களின் துணிபு. ஞானமுங் கல்வியும் நவின்ற நூற்பயிற்சியும் நவயுக நிர்மாணத்திற்கு வேண்டிவை என்பது மகாகவி பாரதியாரின் துணிபு.

தமிழ் இலக்கியங்களைக் கல்லூரி மாணவர்கள் செம்மையாகக் கற்க வழிவகை செய்தல் வேண்டும். அவற்றிலுள்ள விழுமியங்களைப் போற்றுதல் வேண்டும். நல்வாழ்வுக்குத் தேவையான ஞானோபதேசங்களும் மனிதாபிமானச் சிந்தனைகளும் ஆழமான அறிவியற் சிந்தனைகளும் அவற்றிலே நிறைந்துள்ளன. தமிழ் இலக்கியம் பற்றிய கற்கை நெறிகளைப் பரிசீலிப்பதற்கு வேண்டிய சிந்தனை உதயமாவதற்கு, தமிழ்விழா ஏதுவான ஒரு காலமாக அமைதல் வேண்டும்.


கலாநிதி. ச. பத்மநாதன்

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்,
பேராதனைப் பல்கலைக் கழகம்,
உபதலைவர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
அங்கத்தவர், தேசியக் கல்வி ஆணைக்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு, செட்டியார்தெரு புதிய கதிர்வேலாயுத சுவாமி கோயில் அறங்காவலரும், செட்டி நாட்டு கார்பிரேஷன் முகாமையாளருமான சிவநெறிச் செல்வர், சிவநெறிச்செம்மல் *உயர்திரு ஆர். எம். பழனியப்பச்செட்டியார்.*

## *அவர்களின் வாழ்த்துச் செய்தி*

கொழும்பு இந்துக்கல்லூரி தமிழ் மாணவர் மன்றம் நடத்தும் முத்தமிழ் விழாவிற்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழுக்கு வருடந்தோறும் பெருவிழா எடுத்து தமிழ் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றிவரும் தமிழ் மாணவர் மன்றத்தினரையும், அதற்குப் பக்கபலமாக இருந்து செயலாற்றிவரும் கல்லூரி அதிபர் திரு. பா.சி. சர்மா அவர்களையும் பாராட்டாமலிருக்க முடியாது.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தில் தோன்றிய தமிழ்மொழிக்கு இந்தியாவில் டாக்டர். ராஜாசேர் அண்ணாமலை செட்டியார் அவர்கள், பல வருடங்களுக்கு முன் தமிழிசை என்ற பெயரில் ராஜா அண்ணாமலை மன்றம் எனும் மன்றத்தைச் சென்னையில் ஆரம்பித்து தமிழிலே சங்கீதங்களைப் பாட ஏற்பாடு செய்து, வருடாவருடம் மிகவுஞ் சிறப்பாக நடைபெற வழிவகுத்தார்கள். அதற்காக அவர்களுக்கு நாங்களும், எமது பிற்கால சந்ததியினரும் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை இச்சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள நான் ஆசைப்படுகிறேன்.

1945 ஆம் ஆண்டளவில் பம்பலப்பிட்டி எங்கள் புதிய கதிரேசன் ஆலய இடும்பன் மடம் எனும் கட்டிடத்தில் முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதி திரு. சி. நாகலிங்கம், மற்றும் கே. கனகரத்தினம், எஸ். சுப்பிரமணியம் இன்னும் பல பெரியார்கள் எங்கள் நகரத்தார் அனுமதியுடன் மூன்று நான்கு பிள்ளைகளுடன் பிள்ளையார் பாடசாலை என்று ஆரம்பித்த பள்ளிக்கூடம் தான், தற்போது சுமார் நாலாயிரம் பிள்ளைகள் கல்வி கற்கக்கூடிய ஒரு தேசிய கல்லூரியாக வளர்ச்சி பெற்ற இந்துக்கல்லூரியாகவும், மேலும், இந்த புதிய கதிரேசன் ஆலயத்திற்குச் சொந்தமான சுமார் மூன்றரை ஏக்கர் நிலத்தில் பாரிய கட்டிடங்களுடன் தலைநகரில் நிமிர்ந்து நிற்கிறது. அத்துடன் இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியும் இதே ஆலய நிலத்தில் சுமார் ஒன்றரை ஏக்கரில், இரண்டாயிரம் பிள்ளைகளுடன் தேசிய கல்லூரியாக விளங்கி வருகிறது. இவைகுறித்து எமது நகரத்துச் செட்டியார் சமூகத்தினர் பெருமைப்படுகின்றோம்.

தமிழ் மாணவமன்றம் நடத்தும் இம் முத்தமிழ் விழா சிறப்பாக நடைபெற எனது ஆசிகளை வழங்குவதுடன், கல்லூரி அதிபர், ஆசிரியர், மாணவர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!
வாழிய வாழியவே!
நன்றி வணக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல்வரின் ஆசிச்செய்தி

"இயற்கையிலே கருத்தாங்கி இனிமையிலே வடிவெடுத்துச்
செயற்கைகடந் தியலிசையில் செய்நடமே! வாழியரோ
பயிற்சிநிலைப் பயிர்களெலாம் பசுமையுற ஒளிவழியே
உயிர்ப்பருளும் திறம்வாய்ந்த உயர் தமிழ்த்தாய் வாழியரோ"

என்பது திரு. வி. க. வின் கூற்று எனலாம். தீந்தமிழின் நறுஞ்சுவையை நனி சொட்டச் சொட்ட எம் மாணவர் அறிந்துகொள்ள வேண்டும், என்னும் எனது வேணவாவின் வெளிப்பாடே இந்த முத்தமிழ் விழாவாகும்.

எமது சமுதாயத்தின் எதிர்காலத் தூண்களாகத்திகழப் போகும் எம் மாணவர் படித்துப் பட்டம் பெற்றுவிட்டால் மட்டும் போதாது. கலைகளை நுகரவும் ஏனைய திறன்களைப் பெறவேண்டு மெனவும் நாம் விரும்புகின்றோம். பாடசாலை என்பது பயிற்சியின் களமாகும். அந்தப் பயிற்சி முதிர்ச்சி பெற்றால் அவை அவர்களுக்குப் பழக்கமாகிவிடும். புத்தகப் பூச்சியாக மட்டும் இல்லாமல், எதையும் துணிந்து செய்யும் ஆற்றலும் எதற்கும் முகங் கொடுக்கும் திறமையும் பெற இத்தகைய விழாக்கள் அவர்களுக்கு வழிகாட்டும்.

ஆண்டாண்டு தோறும் எமது பாடசாலைத் தமிழ் மாணவர் மன்றம், தமிழ் நங்கைக்கு ஆரஞ் சூட்டத் தவறுவதில்லை. அந்தவழியில், இந்த ஆண்டுத் தமிழ் மன்றமும் தன் ஆரத்தைச் சூட்ட விளைகின்றது. அந்த ஆசை தடங்கலுறாது நிறைவேர மனதார வாழ்த்துகின்றேன்.

"தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்"

என்பதே தமிழ் மன்றத்தின் ஆசை. அதற்கு எமது பாடசாலை ஆசிரியர்கள் சகல விதங்களிலும் வழிகாட்டுகின்றனர். அந்தப் பாதையில் வீறுநடைபோட்டு எமது பாடசாலை மரபைக் காக்கும் விதத்தில் செயற்படும் திறமை உங்களுக்குத்தான் இருக்க வேண்டும். உங்கள் முயற்சி நற்பலன் கொடுக்க, எனது ஒத்துழைப்பை நல்குவதுடன் ஆசிகளும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

**பா. சி. சர்மா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உப அதிபரின் ஆசிச்செய்தி

தமிழும், சைவமும், பாரம்பரியப் பண்பாடும் செழித்தோங்கிய பெருமை வாய்ந்த இந்துக்கல்லூரியின் தமிழ்மன்றம் வருடாவருடம் எடுக்கும் முத்தமிழ்விழா, இயல் இசை, நாடகத்திற்கு முடிசூட்டும் முயற்சியே. விழாவின்போது வெளியிடும் "தமிழ் தீபம்" மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமையும் பெருமிதமும் அடைகின்றேன்.

எமது மாணவர்கள் எடுக்கும் இத்தகைய விழாக்கள் மூலம் அவர்களின் செயற்திறமை, மொழியார்வம் முதலியன வெளிவருவதோடு மாணவர்களின் உள்ளங்களும் பூரிப்படைகின்றன எனவே, மாணவர்களுக்கு இத்தகைய வாய்ப்பினை வழங்கக் களம் அமைத்த தமிழ் மன்றத்தின் பணிகள் எதிர்வரும் காலங்களிலும் தொடர வேண்டுமென விரும்புகின்றேன்.

"தமிழ் தீபம்" மலரானது சிறப்புற அமைந்து, பலருக்கும் பயன்படும் வண்ணம் அமைய வேண்டுமென வாழ்த்துவதோடு, இம்மலரை வெளியிட முனைந்து செயற்பட்ட விழாக்குழுவினருக்கு, எனது பாராட்டுக்களையும், நல்லாசிகளையும் கூறிக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இறுதியாக விழா சிறப்பாக அமைய வித்தக விநாயகரை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**செல்வி. சா. வேலுப்பிள்ளை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உப அதிபரின் செய்தி

உலகம் மதிக்கும் சிறந்தமொழிகளில் நம் தமிழ்மொழியும் ஒன்று. பன்னெடுங் காலம் பயின்று வரும் காரணத்தாலும் இலக்கியவளத்தாலும், இலக்கணவரம்பினாலும் உயர் செம்மொழியாகப் போற்றப்படுகின்றது. இம்மொழிக்கு தொன்றுதொட்டு மன்னர்களும் புலவர்களும் சங்கம் அமைத்து பணிகள் பல செய்துள்ளனர். தற்காலத்தில் உலகத் தமிழ் ஆராய்ச்சிக்கழகம் உலகளாவிய ரீதியில் விழா எடுத்துவருகின்றது. இந்துவின் மைந்தர்களும் நாற்பத்தைந்தாவது வருடம் தமிழ் அன்னைக்கு விழா எடுக்கின்றனர்.

தலைநகரில் நடைபெறும் முத்தமிழ் விழாக்களில் இந்துவின் விழாவிற்கு ஒருதனிஇடம் உண்டு. காரணம் தூய தமிழ் மணம் வீசும் இவ்விழாவில் மாணவர்களின் உள்ளத்தில் உறைந்துள்ள கலைத்தாகங்கள் இயல், இசை, நாடகம் என்னும் வடிவில் மேடைஏற்றப்படுவதே.

வளர்ந்துவரும் விஞ்ஞான, தொழில்நுட்ப தாக்கங்களால் தமிழ்க் கலாச்சாரங்களும், பண்பாட்டு விழுமியங்களும், கலைவடிவங்களும் மாசுறும் இக்காலத்தில் இம் மாசுறுதலைக் குறைப்பதற்கு இந்துவின் மைந்தர்களின் கலைப்படைப்புகள் வழிஅமைக்கும்.

என் அருமைப் பெற்றோர்களே! பெரியோர்களே! மாணவச்செல்வங்களே! மற்றும் இன்று விழாக்காண வருகைதந்த அனைவருக்கும், இன்றைய கலைப்படைப்புக்கள் யாவும் மாணவர்களின் ஆக்கங்களே. இவை கல்விக்கூடநியதிகளுக்கும் நிதிவளங்களுக்கும் உள்ளடங்கிய வகையிலேயே மேடைஏறுகின்றன என்பதை மனதிற்கொண்டு இரசிக்குமாறு வேண்டுகின்றேன்.

தமிழ் மாணவமன்றத்தினர் வருடாவருடம் வெளியிடும் தமிழ்தீபம் இம்முறையும் புதுப்பொலிவுடன் வெளிவருகின்றது. இதற்காக மன்றத்தினரையும் பொறுப்பாசிரியர்களையும் வாழ்த்துகின்றேன்.

காலக்குறைவாலும், எங்களின் கவனக்குறைவாலும் பிற வேறு காரணங்களாலும் எத்தனையோ குறைகளும், பிழைகளும் ஏற்பட்டிருக்கலாம். அவற்றையெல்லாம் மன்னித்து குற்றம்களைந்து குறைபெய்து கொள்ளுமாறு எல்லோரையும் கை கூப்பி வேண்டுகின்றேன்.

க. த. இராஜரட்ணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பாசிரியரின் செய்தி

"நம்மொழிக்கு விடுதலை நல்கிட எழுந்திரு
பொன்மொழிக்கு நீ புதுமை ஏற்றுவாய்
மக்களை ஒன்றுசேர்! வாழ்வை உயர்த்துக
வாழ்க இளைஞனே! வாழ்க நின்கூட்டம்.

என்று முழங்கி, வீழ்ச்சியுற்றுக் கிடக்கும் நம் தமிழரை எழுச்சியுறச் செய்த புரட்சிக் கவிஞன் பாரதிதாசனது பாடல் எம் காதில் என்றோ ஒருநாள் கேட்டு மங்கிவிட்டது போன்ற ஓர் உணர்வு. "தமிழ்" என்னும் பேருணர்ச்சி போலி வாழ்வாக மங்கிக் கொண்டிருக்கும் இந்த வேளையிலும் எமது பாடசாலை மாணவர், தமிழ் அன்னைக்கு விழா எடுத்து மலரஞ்சலி செய்ய விரும்புகின்றனர். அவர்கள் முயற்சிக்குக் கைகொடுக்கும் பணி ஆசிரியர்களான எமக்கு நிச்சயம் உண்டு.

மாணவர் கனவுகள் நினைவுகளாக வேண்டும் என்னும் நோக்கில் நீண்ட காலங்கள் இழுத்தடிக்கப்பட்ட இந்த விழா இன்று உங்கள் முன்பு மேடையேறுகின்றது. மாணவர் பணியில் குற்றங் குறை காணாது அவர்களை வாழ்த்தி நிற்கவே விரும்புகின்றோம். அவ்வழியில் உங்களையும் கரங்கோத்து நிற்க அன்புடன் அழைக்கின்றோம்.

"எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே. அது
எங்கும் பரவிச் சுடரொளி வீசி
எழிலுடன் வாழியவே"

என்று வாய்திறந்து கூறுங்கள். வாழட்டும் தமிழ் மொழி! வளரட்டும் தமிழ்ச்சிறப்பு, ஓங்கட்டும் எம் மாணவர் பணி என்று கூறி மனதார வாழ்த்துகின்றேன்.

திருமதி தமிழின்பம் மாணிக்கராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மன்றப் பொறுப்பாசிரியரின் வாழ்த்துச் செய்தி

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்"

என்று பாடினார் பாரதியார்

"தமிழுக்கும் அமிழ்தென்று பேர் – அந்தத்
தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

என்று பாடல் இயற்றினார் பாவேந்தர் பாரதிதாசன்.

ஐரோப்பியரான ஜி. யு. போப் அவர்கள்
"எனது கல்லறையில் நான் ஒரு தமிழ் மாணவன் எனப் பொறிக்க வேண்டும்" என்று கூற வைத்த பொருமையுடையது எம் தரணிபாடும் தங்கத் தமிழ் மொழி.

அத்தகைய எம் உயிருக்கு மேலான தமிழ் மொழிக்கு எமது மாணவர்கள் விழா எடுப்பது எமக்கெல்லாம் மகிழ்ச்சியைத் தருகிறது.

பல இடர்களுக்கு மத்தியில் தமிழ் மாணவர் மன்றத்தினர் எதிர் நீச்சலிட்டு "தமிழ்தீபம்" எனும் இவ்விதழை வெளியிடுகின்றனர். இவ்விதழ் மாணவர்களின் ஆக்கத்திறனுக்கு மேலும் ஊக்கம் கொடுப்பதாயும் அமைந்துள்ளது. தமிழ் மாணவர் மன்றத்தினரின் இச் சீரிய பணியை வாழ்த்துவதில் நான் பெருமையடைகின்றேன் . எம்மாணவரின் இத் தமிழ்ப்பணி இனிவரும் காலங்களிலும் சிறப்பாக நடைபெறுவதற்கு, கொழும்பு வாழ் தமிழ் மக்கள் இன்று போல் என்றும் உதவி புரிவார்கள் என்று நம்புகின்றேன்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழ் மன்றத்தின் பணி!

**க. சேய்ந்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மன்றத் தலைவரின்
# இதயம் திறந்தபோது.....

முத்தமிழன்னைக்கு வருடந்தோறும் முடிசூட்டும் எம்மன்றம் இவ்வருடமும் தன் இளைய தலைமுறையின் ஆதரவோடு இன்று, முடிசூட்ட எண்ணியுள்ளது.

"சாகும்போது தமிழ்படித்துச் சாகவேண்டும் – என்
சாம்பலிலும் தமிழ் மலர்ந்து ஓங்க வேண்டும்"

என்று பாடி நிற்கிறான் ஒரு தமிழ்க்கவிஞன். அந்தளவுக்கு தமிழ் ஒவ்வொருவரது குருதியிலும் பிரிக்கமுடியாதவாறு பரவிச் செறிந்துள்ளது. வீரத்தமிழரின் பரம்பரையில் வந்த இளைஞர் நாம், எம் தமிழன்னையின் பெருமைக்கு மேலும் ஒரு மணிமகுடம் சூட்டவுள்ளோம்.

உலகின் சில பிரதேசங்களில் மட்டும் பேசும் மொழியாகத் திகழும் தமிழானது இன்று உலகளாவிய ரீதியில் பரவியும் இருக்கிறது. இந்த முயற்சியில் இந்த விழா ஒரு மைல்கல்லாக இருக்கட்டும்.

இந்த ஆண்டின் முத்தமிழ் விழா சிறப்பாக நடைபெற இறைவனின் நல்லாசியையும் உங்களனைவரினதும் ஆதரவையும் வேண்டி நிற்கிறேன்!

யாமறிந்த மொழிகளிலே
தமிழ்மொழி போல்
இனிதாவதெங்கும் காணோம்!

லோகநாதன் தருஷணன்
தலைவர்
தமிழ் மாணவர் மன்றம்,
இந்துக்கல்லூரி,
கொழும்பு – 4.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளரின் இதயக்கமலத்தில் மலர்ந்த.........

"தெருவோரத் தென்றல் தேனிசைப் பாட்டிசைக்க
கடலோரக் காற்று தெள்ளுதமிழ்க் கவிபாட
எம் மன்றம் தாம் எடுக்கும்
தனிவிழா ஒரு பெருவிழா"

என்னும் வகையில் எமது தமிழ் மாணவமன்றம் இவ்விழாவினை எடுக்கின்றது.

தென் பொதிகையில் பிறந்து தென்றல் காற்றில் தவழ்ந்து அகத்தியன் வாயில் வளர்ந்து முச்சங்கங்களாலும் போற்றப்பட்ட எமது தமிழ்க் கன்னித் தாய்க்கு நாம் செய்யும் இது போன்ற பணி என்றென்றும் தொடரும்.....

"சாகுமட்டும் தமிழ் பயின்று சாகவேண்டும்
எம் சாம்பலிலும் தமிழ் கலந்து போகவேண்டும்" என்ற
உணர்வுடன் எமது தமிழ் மாணவ மன்றம் எடுக்கும் இவ்விழாதனில்
சிறியோர் எம்குறை பொறுத்திங்கே – சிறப்புகள்
கண்டு பாராட்டி புகழ்ந்துரைக்கும் அனைவருக்கும் எம் நன்றி.

தமிழைக் கண்டு கழிக்காது உண்டு களித்து என்றென்றும்
நன்றியுடன் தமிழ் வளர்க்கும் பணியில் நாம்....

**இளம்பிறை நாதன் கோபிநாத்**
(செயலாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர்களின் இதயங்களிலிருந்து.......!

"தமிழிற்கும் அமுதென்று பெயர்
அத்தமிழ் எங்கள் உயிரிற்கு நேர்'

தங்கத்தமிழ் மொழியைத் தரணியிலே தலைநிமிரச் செய்திடவே, எங்கள் ஆற்றல்களை ஒன்றுதிரட்டி எமது கல்லூரியின் தனிப்பெரும் விழாவாம், "முத்தமிழ் விழா'' எனும் இப் பொன்னாளிலே இம்மலரைச் சமைத்து உங்கள் கரங்களிலே மணம் வீச விடுவதை எண்ணி மனமகிழ்வடைகிறோம்.

இந்த மலர் மலர்ந்து மணம்வீச, காலைநேரக் காராது உளமார்ந்த உணர்வுடன் பங்களிப்புத் தந்த அனைத்து மாணவர் கரங்களையும் நன்றி உணர்வுடன் பற்றிக் கொள்கின்றோம். இம்மலர் மலர மனமார ஆக்கமும், ஊக்கமும் நல்கி எம் தோளோடு, தோள் கொடுத்து அனைத்த ஆசிரியப் பெருந்தகைகளையும் மனத்தில் இருத்தி நன்றி பகர்கின்றோம்.

இதழ்கள் பல சேர்ந்துதான் ஒரு மலராகின்றது. இந்த மலரின் ஒவ்வொரு இதழ்களிலும் தமது சிந்தனைச்சிதறல்களைப் பரப்பிய, எமதன்பு மாணவச் செல்வங்களுக்கும், கட்டுரைகள் பல தந்து மலரைச் சிறப்புறச் செய்த பெரியார்களுக்கும், எமது இந்த விழுமிய இலட்சியத்தை அடைய பேருதவி புரிந்த வணிகப் பெருந்தகைகளுக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

எமது ஆற்றல்களும், அறிவும் வளர நல்லாசிகள் தேவை. அதனையே இவ்விதழில் நாம் நாடி நிற்கின்ற அதேவேளை,

'எம்மை நன்றாக இறைவன் படைத்தனன்
தம்மை நன்றாகத் தமிழ் செய்யுமாறே'

என்பதற்கிணங்க, எம்மை முழுஉள்ளன்போடு தமிழ் அன்னைக்குச் சமர்ப்பணம் செய்கின்றோம். அதற்குச் சான்றாக இம்மலரினைத் தமிழ் அன்னையின் பாதங்களிலே காணிக்கையாக்குகிறோம்.

வாழ்க தமிழ் வாழ்க தமிழ் மொழி !
வாழிய, வாழிய பல்லாண்டு காலம் !

இதழாசிரியர்கள்
கந்தசாமி மஹிந்தன்
சஞ்சீவ் சிலுவைதாஸ்
சச்சிதாநந்தன் சிவதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மாணவர் மன்றம்

| | | |
|---|---|---|
| காப்பாளர் | – | திரு.பா.சி.சர்மா |
| துணை அதிபர்கள் | – | திரு. த. இராஜரட்ணம் |
| | – | செல்வி. சா. வேலுப்பிள்ளை |
| பொறுப்பாசிரியர்கள் | – | திரு. க. சேய்ந்தன் |
| | – | திருமதி. த. மாணிக்கராஜா |

## தமிழ் மாணவர் மன்ற ஆட்சிக்குழு

| | | |
|---|---|---|
| தலைவர் | – | லோகநாதன் தருஷணன் |
| செயலாளர் | – | இளம்பிறைநாதன் கோபிநாத் |
| பொருளாளர் | – | கனகசேகரம் மஞ்சுதன் |
| இதழாசிரியர் | – | கந்தசாமி மஹிந்தன் |
| துணைத் தலைவர் | – | சிற்சபேசக்குருக்கள் பாலசுப்பிரமணியம் |
| துணைச் செயலாளர்கள் | – | நடேசன் சதீஸ்குமார் |
| | – | கதிரமலைநாதன் கணேஷநாதன் |
| துணைப் பொருளாளர்கள் | – | நடராஜா ஜெயக்குமார் |
| | – | இராமச்சந்திரன் செந்தில்குமார் |
| துணை இதழாசியர்கள் | – | சஞ்சீவ் சிலுவைதாஸ் |
| | – | சச்சிதானந்தன் சிவதரன் |

## இதழாசிரியர் குழு

அருட்சோதி அருட்செல்வன்
விஜயரட்ணம் பிரதீபன்
வாமதேவன் பார்த்தீபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றி பெற்ற மாணவர்கள்

### கட்டுரை

| பிரிவு | 1ஆம் இடம் | 2ஆம் இடம் | 3ஆம் இடம் |
|---|---|---|---|
| கீழ்ப்பிரிவு | வி.விமலாதித்தன் | க.கிரிசாந் | ர.டில்ருக்ஷான்<br>ம.கிருஷ்ணராஜன் |
| மத்தியபிரிவு | பா.சத்தியன் | கே.ஜே.பிரதீபன் | இ.சு.ரேஷ்குமார் |
| மேற்பிரிவு | சி.சங்கர் | து.கஜன் | ந.பிரபோதரன் |
| அதிமேற்பிரிவு | உ.பானுகோபன் | ப.ராஜ் | ம.சுந்தரவதனன் |

### பேச்சு

| பிரிவு | 1ஆம் இடம் | 2ஆம் இடம் | 3ஆம் இடம் |
|---|---|---|---|
| கீழ்ப்பிரிவு | | | |
| மத்தியபிரிவு | எஸ்.சாமரன் | ரி.மீனிலங்கோ | எஸ்.லாவர்ணன் |
| மேற்பிரிவு | ரி.தமிழமுதன் | ஏ.ஆர்.திருச்செந்தூரன் | எஸ்.உமாசுதன் |
| அதிமேற்பிரிவு | எஸ்.பிரகாஸ் | ஆ.இ.வாமலோசனன் | ஜி.லக்ஸ்மன் |

### கவிதை

| பிரிவு | 1ஆம் இடம் | 2ஆம் இடம் | 3ஆம் இடம் |
|---|---|---|---|
| மேற்பிரிவு | சி. சங்கர் | ஆ.இ.திருச்செந்தூரன் | ந.பிரபோதரன் |
| அதிமேற்பிரிவு | ஆ.இ.வாமலோசனன் | வா.பார்த்தீபன் | ந.சதீஸ்குமார் |

### சிறுகதை

| பிரிவு | 1ஆம் இடம் | 2ஆம் இடம் | 3ஆம் இடம் |
|---|---|---|---|
| மேற்பிரிவு | ந. பிரபோதரன் | ஆ.இ.திருச்செந்தூரன் | வா.முகிலன் |
| அதிமேற்பிரிவு | ஆ.இ.வாமலோசனன் | இ.கேசவன் | ப.ராஜு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தமிழ்மொழி

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தில் முன்தோன்றிய மூத்தகுடி எமது குடி. மூவேந்தர்களால் போற்றி வளர்க்கப்பட்டது எங்கள் தமிழ் மொழி. சங்கப்புலவர்களால் ஏற்றம் பெற்ற எங்கள் தமிழ், பழைமையும் பெருமையும் இலக்கிய வளமும் உடையது. இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழையும் தன்னகத்தே கொண்டுள்ள தமிழை பாரதியார் "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்" எனப் போற்றிப்புகழ்ந்து கூறியுள்ளார்.

தமிழை நிலைநாட்ட தமிழன்னை பெற்ற செல்வங்களாக திருக்குறள், கம்பராமாயணம், சிலப்பதிகாரம் ஆகியன திகழ்கின்றன. இலக்கிய அம்சம்தான் ஒரு மொழிக்குப் பெருமையளிக்கும். இலக்கியம் காலத்தினைப் பிரதிபலிக்கும் கண்ணாடி போன்றது. அத்தகைய இலக்கியம் எங்கள் தமிழிடமுண்டு.

சைவமும் தமிழும் தொன்று தொட்டு பின்னிப்பிணைந்து வருகின்றது. இதை ஔவையார் பாடிய "துங்கக்கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச் சங்கத் தமிழ் மூன்றும் தா" என்ற வரிகள் சுட்டிக் காட்டுகின்றன. தமிழ் மகத்தான சாதனைகளைச் செய்யும் சக்திவாய்ந்த மொழி. இதன் இனிமையை உணர்ந்த கவியரசர் கண்ணதாசன் "தமிழுக்கும் அமுதென்று பெயர் – இன்பத் தமிழ் எந்தன் உயிருக்கு நேர்" என்று தாம் மிகவும் விரும்பி இரசித்த தமிழைப் போற்றிப் புகழ்ந்து பாடியுள்ளார். எங்கள் தமிழ் மொழி தமிழர்களை மட்டுமன்றிப் பிற இனத்தவரையும் கவர்ந்துள்ளது என்பதற்குத் திருவள்ளுவர் அருளிச்செய்த திருக்குறள் பிறமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளமை சிறந்த ஒரு சான்று ஆகும்.

"எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ் மொழி என்றென்றும் வாழியவே" என்னும் பாரதியார் கூற்றை நாம் என்றும் நினைவில் வைத்து வாழ்வோமாக.

**வி. விமலாதித்தன்**
ஆண்டு 5A
முதலாமிடம்
கீழ்ப்பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மா.....அம்மா" என்று உரக்கக் கூவியவாறு, வீட்டினுள்ளே நுழைந்தான் விஜயன். சுவரின் மேலே தொங்கியிருந்த கடிகாரம் இரண்டு மணியைக் கடந்து விட்டதைக் காட்ட, பரபரப்படைந்தவனாக "அம்மா... கெதியெண்டு சாப்பாட்டைப் போடுங்கோ......எனக்கு ரெண்டரைக்கு டியூஷன்...." என்றவாறு அவசர அவசரமாக, புழுதி ஆங்காங்கே அப்பியிருந்த பள்ளிச்சீருடையை மாற்றி, குளியலறைக்குப் பாய்ந்தோடினான்.

விஜயன் கொழும்பின் பிரபலமான பாடசாலையொன்றிலே உயர்தரம் படித்துக் கொண்டிருக்கிறான், கல்வியில் சிறப்பான மதிப்பெண்களையும், பண்பிலே ஆசிரியரிடம் நல்ல மதிப்பையும் பெற்றிருப்பவன். ஆனால், அவனது குடும்பம் ஒரு சாதாரண மத்தியதரக் குடும்பம் தான்! தந்தை தனியார் நிறுவனமொன்றிலே லிகிதர், இதனால் சிறு வயதிலிருந்தே அடிபட்டு வாழப்பழகியிருந்த விஜயன் மத்தியதர வர்க்கப் பிள்ளைக்கேயுரிய பொறுமை, அடக்கம், அமைதி போன்ற குணங்களும், சுமைகளைச் சுமக்கும் துணிவும் கொண்டிருந்தான்.

முகம், கை, கால் கழுவி உடை மாற்றிவந்த விஜயன், அம்மா தட்டில் போட்டுவைத்திருந்த சோற்றினையும், தொட்டுக்கொள்ளவிருந்த சில கறிகளையும் அவசரமாக உண்ண ஆரம்பித்தான். தட்டிலே சோறு, கறி முடிந்து விட்டதைக் கைகள் உணர்த்த, கைகளைக் கழுவிவிட்டு, புத்தகங்களைக் கையில் எடுத்தபடி, "போயிட்டு வாறனம்மா" என்று தாயாருக்குக் கூறிவிட்டு சகாராவைப் போல் காய்ந்தபடியிருந்த வீதியில் நடக்கத் தொடங்கினான்.

கால்கள் தான் புழுதியும், அனலும் பறக்கும் வீதியில் நடைபயின்றன. மனமோ நான்கு சுவருக்குள் சிக்கித் தவிக்கும் பறவை போலத் தடுமாறிக் கொண்டிருந்தது. இன்று பாடசாலையில் நடந்த அந்தச் சம்பவம் அலைபோல மீண்டும் மீண்டும் வந்து மனத்தை அரித்துக் கொண்டிருந்தது.

"பிள்ளையள்..... நேற்று நான் சொன்னனான் எல்லே, எல்லாரும் அந்தப் பொது இரசாயனம் என்ற புத்தகத்திலிருந்து பயிற்சி செய்து கொண்டு வரவேணுமெண்டு?........ எல்லாரும் செய்து போட்டியள் தானே? செய்யாத ஆக்கள் ஆர்?" என்று இரசாயன ஆசிரியர் கேட்டவுடன், வகுப்பில் நிசப்தம்! விஜயன் எழுந்து நின்றான். ஆசிரியர் என்ன என்ற பாவனையில் தலையை அசைக்க,

"சேர், நான்.... செய்யேல்லை!" என்ற பதில் மெதுவாக வெளிவருகிறது விஜயனிடமிருந்து!

"ஏன்.... உங்களுக்கு அவ்வளவு பெரிய உத்தியோகமே?" என்ற நக்கலான கேள்வி ஆசிரியர் கேட்டவுடன்,

"சேர், என்னட்டை அந்தப் புத்தகமில்லை....." என்று விஜயன் தலை குனிந்தவாறு கூற, விஜயனின் நல்ல குணங்கள், கல்வித் திறமை பற்றிச் சரியாக அறிந்திராத, அவ் ஆசிரியரால் வகுப்பறைக்கு வெளியே துரத்தப்பட்டான்.

இது தான் விஜயனின் மனதை நோகடித்த சம்பவம்! சே, இந்தக் குடும்பத்தில் வந்து பிறந்ததால் எவ்வளவு கஷ்டங்கள், கவலைகள்! மத்தியதரக் குடும்பம் என்றாலே இப்படியா? பிறந்தது முதலே எத்தனை கவலைகள், சுமைகளைச் சுமந்து விட்டேன்? கல்வி கற்கும் வயதிலேயே இப்படியா? மற்ற என் வயதினரைப் போல் நானும் மகிழ்ச்சியாக வாழ முடியாதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனப் பலவாறு, பல கோணங்களில் ஏங்கிய படியே, ஓங்கியுயர்ந்த கட்டிடத்தையுடைய அந்தத் தனியார் வகுப்பை அடைந்தது அந்தக் கனத்த மனம்!

வாசலில் நின்று கொண்டிருந்த குட்டியானை, (அதுதான் அனுமதியட்டையைப் பரிசோதிப்பவருக்கு மாணவமணிகள் வைத்த செல்லப் பெயர்) "தம்பி, கொஞ்சம் நில்லும்... உம்மடை கார்டைப் பாப்பம்" என்று அழைக்கச் சிந்தனையை விட்டு விலகியவன், தன்னையா அழைத்தார் என உறுதி செய்து விட்டு, தன் கார்டைக் கொடுத்தபோதுதான் ஞாபகம் வந்தது இந்தமாத ஃபீஸை இன்னும் கட்டவில்லை என்று! அப்பாவிடம் அன்றே கூறியிருந்தான், எனினும் தந்தைக்குப் பணத் தட்டுப்பாடு இருந்ததால் கிடைக்கவில்லை. இன்று, அதனால் பலபேர் முன்னிலையில் அவமானப்படப் போகிறான்!

நினைத்தது போலவே நடந்துவிட்டது பல மாணவ, மாணவியர் முன்னிலையில் திட்டுகள் வாங்கினான், ஏற்கனவே கனத்து இருந்த மனம் பாறாங்கல் சுமப்பது போலாகிவிட்டது! பொங்கி வந்த கண்ணீரை விழிகளிலேயே தேக்கிக் கொண்டான்!

அன்றைய வகுப்பு முழுவதுமே மனம் லயிக்கவில்லை! வழமை போல் கணக்குகளை எளிதாகச் செய்ய இயலவில்லை, மனம் முழுவதும் வீட்டுச் சூழ்நிலைகளும், அன்று நடந்த இரு அவமானங்களும் மனதினை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன!

எப்போது வகுப்பு முடியுமென்றிருந்தவன், வகுப்பு முடிந்ததும், நிலவின் குளிரால் சூழப்பட்ட வீதியில், நடைபோடத் தொடங்கினான், வழிநெடுகப் பழைய சம்பவங்கள் மனதை நோக வைத்துக் கொண்டிருந்தன! வீட்டின் கதவினையடைந்தவன், உள்ளே தாய், தந்தையின் சம்பாஷணை நடப்பது கேட்டு, வெளியே நின்றுவிட்டான்!

"என்ன பவளம், உம்மடை நகையளைத் தாறீரே? அடைவு வைச்சு விஜிக்கு டியூஷன் ஃபீஸ் கட்டக் குடுப்பம்.... பிறகு என்ரை சம்பளம் வந்தவுட்னை மீட்டிடலாம்!" தந்தையின் குரல் கேட்கிறது!

"ஓமப்பா.... அவன் நல்லாப் படிக்கிறான்.... எந்தக் கஷ்டப் பட்டாவது அவனைப் படிக்க வைக்கவேணும்..... படிச்சு முடிச்சு நல்ல வேலை எடுத்தானெண்டால் பிறகென்ன? " தாயினது குரல் ஒருவித எதிர்பார்ப்புடன் கேட்கிறது!

வெளியே நின்ற விஜிக்குக் கேட்ட உரையாடல் கண்களில் நீரையே வரவழைத்துவிட்டது! அப்பா, அம்மாவை இப்படிக் கஷ்டப்படுத்திக் கற்கும் கல்வி எனக்குத் தேவையா? பேசாமல் எங்காவது வேலை கிடைத்தாலாவது உழைத்துச் சம்பாதிக்கலாமே? இவ்வாறு பலப்பல சித்தனைகள் மீண்டும் மனதிலெழ, சிந்தனைவயப் பட்டவனாக வீட்டினுள்ளே நுழைந்தான்!

உள்ளே சம்பாஷணை தடைப்பட்டு விட்டது! அம்மா தன்னைச் சுதாகரித்தவாறு "விஜியே... வாடா... களைச்சுப்போய் வந்திருப்பாய்... தேத்தண்ணி இருக்குது.... எடுத்துக் கொண்டு வாறன்" என்றபடி உள்ளே செல்ல முயல, விஜயன் "நில்லுங்கோ அம்மா, நான் நீங்கள் ரெண்டுபேர் கதைச்சதையும் வெளியிலை இருந்து கேட்டனான்" என்று நிறுத்த, தந்தையின் முகத்தில் கலவர ரேகைகள், தாயின் முகத்திலோ கவலை ரேகைகள்!

*எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்-பண்புடை மக்கட் பெறின்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்பா எங்களை மாதிரியாக்கள் படிக்கிறது எண்டது நடக்காத காரியம்... அப்பா எனக்கு ஒரு வேலை எடுத்துத் தாங்கோ! "என்று கூறிமுடித்துவிட்டு, தாய்தந்தையரைப் பார்க்க, தாய் என்ன செய்வதென்றறியாமல் பதறியபடியிருந்தார்! தந்தையோ வெகு நிதானமாக,

"சரி, நீ வேலைக்குப் போகத்தான் வேணுமெண்டால் போ.... ஆனால் இவ்வளவு நாளும் படிச்சதை என்ன செய்யப் போறாய்? இவ்வளவு நாளும் படிச்ச காலம் வீண்தானே? விஜி... சின்ன வயசிலை நான் பல சுமைகள், சோகங்களுக்கு மத்தியிலைதான் படிச்சு முடிச்சன்! சுமையெண்டது வந்தால்தான் பிறகு சுகம் கிடைக்கும்! நாங்கள் கஷ்டப்பட்டு உன்னைப் படிப்பிக்கிறது பிற்காலத்திலை உன்ரை உழைப்பிலை நாங்கள் சுகங் காணத்தானே? நான் கஷ்டப்பட்டாலும் நீ படி... முன்னேறு! எவ்வளவு துன்பப்பட்டாலும் அதை உன்ரை இலட்சியம் எண்டு நினை" என்று கூறித் தந்தை நிறுத்த,

விஜயன் மௌனமாகிப் போனான், அவன் கண்கள் குளம் கட்டி நிற்க, பெற்றோரின் கண்களும் கலங்க ஆரம்பிக்கின்றன. எனினும் அது சோகநேரமல்ல! விஜயன் எனும் இளைஞனின் மனதில் இலட்சிய விதையொன்று தூவப்பட்ட சுபநேரம்!

"அம்மா, தேத்தண்ணியைத் தாங்கோ! நான் படிக்க வேணும்" என்று தெளிவாகக் கூறிவிட்டு அறையை நோக்கி நடக்கிறான். அவனது உறுதியான நடை, சுமைகள் இறங்கிய மனிதனின் நடையினைப் பிரதிபலிக்கின்றது.

விஜி இனித் தொடர்ந்தும் கல்வி கற்கப் போகிறான், அவனது சுமைகள் எல்லாம் இலட்சியமாக மாற்றம் பெற ஆரம்பித்துவிட்டன! அந்த மத்தியதரக் குடும்பத்தின் விடிவு நாள் வெகு தொலைவில் இல்லை!.

ஆ. இ. வாமலோசனன்
ஆண்டு 12 (பௌதீக விஞ்ஞானப்பிரிவு)
அதிமேற்பிரிவு சிறுகதை
முதல் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்

விண் இன்றேல் நிலவில்லை
முகில் இன்றேல் மழையில்லை
மொட்டு இன்றேல் மலரில்லை
அன்பு இன்றேல் உயிரில்லை
அன்னை இன்றேல் நானில்லை

## எங்கும் நிறைந்தவளே

கவிதை பாட வரிகள் தேடினேன்
உன் பெயரேகிடைத்தது
விழிகள் மூடி இருளைத் தேடினேன்
உன் முகமே தெரிந்தது
என் உயர்வான உள்ளத்தைத் தேடினேன்
உன் இதயமே தெரிந்தது

## காதலை வேண்டி.....

தென்றலாக நான் இருந்தால் உன்
மேனியைத் தீண்டிச் சென்றிருப்பேன்
மலராக நான் இருந்தால் உன்
கூந்தலை நாடியிருப்பேன்
செருப்பாக நான் இருந்தால் உன்
பாதங்களை வேண்டியிருப்பேன்
மனிதனாகப் பிறந்ததால் உன்
காதலை வேண்டித்தவம்
கிடந்தேன்

## உள்ளவரை.......

சொந்தம் சொத்து
உள்ளவரை
சொத்து உழைப்பு
உள்ளவரை
ஆனால் அன்பு உயிர்
உள்ளவரை

## என்னவளின் முகவரி

நடந்து செல்லும் நந்தவனம்
ஆடை உடுத்திய அதிசயத்தென்றல்
பிள்ளை மனம் கொண்ட வெள்ளை நிலா
பிழையில்லாப் பிரம்மனின் படைப்பு
தாவணி அணிந்த தாமரைமலர்.

க.கணேஷநாதன்
ஆண்டு 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்டம் எல்லாம்.....

வஞ்சி அவள் பேசினாள் வார்த்தைகளில்
வழிந்தோடும் தேனைக் கண்டேன்
கன்னி அவள் கண் விழித்தாள்
களங்கமின்றிக் கவர்வதைக் கண்டேன்
பாவை அவள் பாதம் பதித்தாள்
பசுமையான தேசம் கண்டேன்
மொத்தத்தில் அவள் அசைவில் எல்லாம்
அண்டம் முழுதும் கண்டேன்.

## சீர்கெட்ட சீதனம்

அன்பு அதை அடகுவைத்து
இரக்கம் அதை இரவல் கொடுத்து
வாழ்க்கை அதை வரதட்சணைக்கு
அடிமையாக்கி
தேவையா இந்தக்கல்யாணம்
களங்கப்பட்ட கல்யாணம்.

## காதல் மொழி

காதல் மொழி அகராதியில்
எத்தனை எழுத்துக்கள்?
நான்கு
எப்படி?
உன்னிடம் இரண்டுகண்கள்
அவளிடம் இரண்டுகண்கள்.

## வேதாந்தி

ஓ.........
சூரிய காந்திகளே
அந்தச் சூரியனிடம் அப்படி என்னதான்
எதிர்பார்க்கிறீர்கள்?

## காதல் விதை

இன்ப எதிர்பார்ப்புக்களோடு
காத்திருக்கும் இதயத்தில்
யாராவது ஆசை விதையை
ஊற்றினால் சிந்திக்காமல்
ஏற்றுக்கொள்ளும் அறியாமை
தான் காதல்!

ந. சதீஸ்குமார்
12 A
(கணிதப்பிரிவு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிய தமிழ்

இறைவன் மடியில் பிறந்து - குளிர்
தென்றலில் தவழ்ந்து - புண்ணிய
பூமியில் வளர்ந்து - தமிழன்
நாவில் நடந்த மொழி.

கம்பன் சிரசில் தேங்கி - வள்ளுவன்
குறளில் தங்கி - இளங்கோ
மனதில் பொங்கி - பாரதி
நாவில் ஓங்கிய மொழி.

தேனினும் இனிதாய்க் கனிந்து
தேயா வளர்பிறை போன்றலர்ந்து
வானினும் ஓங்கி வளர்ந்து
வாடாப் பூவாய்த் திகழ்வது.

தங்கம் போன்று மிளிர்வது
தரணியில் தனித்து வளர்ந்தது
இயலொடு இசையும் கலந்தது
இன்ப நாடகந்தனை, தந்தது.

எட்டுத்திக்கும் புகழ்மணக்கும்
எல்லா இடமும் துள்ளிக்குதிக்கும்
கண்டமெல்லாந் தன்நாவினிலடக்கும்
செந்தமிழ் எம் சிந்தையிலிருக்கும்.

உலகில் இனிய மொழி எம்மொழி - எம்
உணர்வில் கலந்த மொழி எம்மொழி
காதலுக்குரிய மொழி எம்மொழி
தேன்சொட்டும் தீந்தமிழே அந்தமொழி.

செந்தமிழ்ச் செல்வமே வாழி !
சங்கச் சந்தமே வாழி !
தீந்தமிழ் தந்தவர் வாழி !
எம் மொழி எந்நாளுமுயர் வெய்திடவாழி !

*சிதம்பரநாதன் சங்கர்*
ஆண்டு 11E,

(மேற்பிரிவில் முதற் பரிசு பெற்ற கவிதை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதியதோர் உலகஞ் செய்வோம் !

போரும் போதையும் நிறைந்த உலகே,
பொறாமை பேதைமை கொண்ட குலமே,
புரட்சிகளால் இவை களைவோம் நாம்,
புதிய உலகஞ் சமைப்போம் நாம்,

அடிமை விலங்குகள் தெறிக்க வைப்போம் !
யாவரும் ஒருகுலம் என நினைப்போம் !
விடிவை ஒருநாள் பெற்றிடுவோம் !
வெற்றிகளைக் கைப்பற்றிடுவோம் !

பாரினிலே நாம் பட்டினியென்னும்
பாவியைத் தொலைத்திடுவோம் !
போரினாலே தினம் செத்துமடியும்
பூமியைக் காத்திடுவோம் !

சாதிசமயச் சண்டைகள் மறந்தால்
சமாதானப் பூ மலர்ந்திடுமே !
பேதங்கள் நீங்கிப் புதுமை நிகழ்ந்தால்
பேதைமைப் பேய் விட்டு ஓடிடுமே !

பூமியைப் புதிதாய் மாற்றிடவிரும்பின்,
புலமை வேண்டும், மதிவேண்டும் !
விதியை வெல்லும் திறனும் வேண்டின்,
வேகம் வேண்டும், வீரம் வேண்டும் !

இளைஞர் சமுதாயம் ஒன்றுபடின்
இனிய உலகம் பிறந்துவிடும் !
தீச்செயல் களைந்து திருந்திவிட்டால்
தினமும் வரும் நாள் திருநாளே !


நாளைய உலகம் நமதென்போம் !
நமக்கே எல்லா வளமென்போம் !
பூமியிலே உள்ள தீமைகள் களைந்து,
புதியதோர் உலகம் செய்திடுவோம் !

இரகுபதிபாலஸ்ரீதரன் வாமலோசனன்
ஆண்டு 12A

(அதிமேற்பிரிவில் முதற் பரிசு பெற்ற கவிதை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மாணவர் மன்ற ஆட்சிக்குழு



அமர்ந்திருப்பவர்கள் இடமிருந்து வலம்:-

திரு. க. சேய்ந்தன் (பொறுப்பாசிரியர்) செல்வன் க. மஞ்சுதன் (பொருளாளர்)
திரு. இராஜரட்னம் (உப அதிபர்) செல்வன் தருஷணன் (தலைவர்)
திரு. பா. சி. சர்மா (அதிபர்) செல்வன் இ. கோபிநாத் (செயலாளர்)
செல்வி. சா. வேலுப்பிள்ளை (உப அதிபர்) செல்வன் மஹிந்தன் (இதழாசிரியர்)
திருமதி. த. மாணிக்கராஜா (பொறுப்பாசிரியர்)

நிற்பவர்கள் இடமிருந்து வலம்:-

செல்வன் அ. அருட்செல்வன் (இதழாசிரியர் குழு)
செல்வன் வி. பிரதீபன் (இதழாசிரியர் குழு)
செல்வன் கணேஸதாசன் (துணைச் செயலாளர்)
செல்வன் ச. சிவதரன் (துணை இதழாசிரியர்)
செல்வன் சி. சஞ்சீவ் (துணை இதழாசிரியர்)
செல்வன் இ. செத்தில் குமரன் (துணைப் பொருளாளர்)
செல்வன் த. ஜெயக்குமார் ( துணைப் பொருளாளர்)
செல்வன் ந. சதீஸ்குமார் (துணைச் செயலாளர்)
செல்வன் சி. பாலசுப்பிரமணியம் (துணைத் தலைவர்)

குழல் இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்- மழலைச்சொல் கேளா தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துக் கல்லூரியின் தமிழ் மாண

# முத்தமிழ்

நிகழ்ச்

- தமிழ்த் தாய் வாழ்த்து
- வரவேற்புரை - தமிழ் மாணவ மன்றத்தலைவர்
- தீப நடனம்
- பேச்சு - கீழ்ப்பிரிவு
- சுதந்திர தாகம் - வரலாற்று நாடகம்
- குழுப் பாடல்
- நடனம் - நாட்டுப் பாடல்
- தமிழ் தீபம் நூல் வெளியீடு
- முதன்மை விருந்தினர் உரை
- விடியலை நோக்கி - நாடகம்
- பேச்சு - மேற்பிரிவு
- இசை நிகழ்ச்சி - 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ர் மன்றம் பெருமையுடன் வழங்கும்

# விழா "95"

ி நிரல்

இ

லை

ட

ே

ப

லை

ா

- சீதனமில்லாக் கல்யாணம் – தாள லயம்
- இசைப்பயணம் – நகைச்சுவை நாடகம்
- ஸ்டூடியோவில் கலாட்டா – நகைச்சுவை நாடகம்
- நன்றியுரை – செயலாளர்
- இசை நிகழ்ச்சி – 11
- கல்லூரி கீதம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விழா அமைப்புக் குழு



*அமர்ந்திருப்பவர்கள் (இடமிருந்து வலம்)*

செல்வன். அ. அருட் செல்வன் (இதழாசிரியர் குழு) செல்வன் வி. பிரதீபன் (இதழாசிரியர் குழு) செல்வன் க. கணேஷநாதன் (துணைச் செயலாளர்) செல்வன் ச. சிவதரன் (துணை இதழாசிரியர்) செல்வன் க. மஹிந்தன் (இதழாசிரியர்) திருமதி த. மாணிக்கராஜா (பொறுப்பாசிரியர்) செல்வன் இ. கோபிநாத் (செயலாளர்) செல்வன் லோ. தருஷணன் (தலைவர்) திரு.க. சேய்ந்தன் (பொறுப்பாசிரியர்) செல்வன் சி. சஞ்சீவ் (துணை இதழாசிரியர்) செல்வன் க. மஞ்சுதன் (பொருளாளர்) செல்வன் சி. பாலசுப்பிரமணியம் (துணைத் தலைவர்) செல்வன் த. சதீஸ்குமார் (துணைச் செயலாளர்) செல்வன் ந. ஜெயக்குமார் (துணைப் பொருளாளர்) செல்வன் இ. செந்தில்குமரன் (துணைப் பொருளாளர்)

*முதலாவதாக நிற்பவர்கள் (இடமிருந்து வலம்)*

செல்வன் ஜெ. அமிதாப், செல்வன் ரா. மயூரன், செல்வன் ஜெ. திலீபன், செல்வன் றோ. நீருபன், செல்வன் ம. சரவணன், செல்வன் அ. இ. வாமலோசனன், செல்வன் ஜீ கஜமுகன், செல்வன் தீ. சரவணன், செல்வன் ஜெ. ஜெயப்பிரஷாந், செல்வன் இ. பிரசாத் செல்வன் ராஜநவேந்திரன்

*இரண்டாவதாக நிற்பவர்கள் (இடமிருந்து வலம்)*

செல்வன் ர. செந்தூரன், செல்வன் பீ. கெர்சன், செல்வன் தி. ஜெனீவன், செல்வன் சுதர்சன், செல்வன் க. கலாஹரிஹரன், செல்வன் ஜெ. சபேசன், செல்வன் வா. முகிலன், செல்வன் சி. ரஞ்சித், செல்வன் சி. ரமேஷ், செல்வன் சி. யதுகுலன்.

சமுகமளிக்காதவர் செல்வன் வா. பார்த்தீபன், செல்வன் சி. வசந்தகுமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our Well Wishers

1. MR. & MRS. RAVI KULARAJAN
2. MR. & MRS. LOGENTHIRAN
3. MR. M. THAVAYOGARAJAH
4. MR. M. GANESHAN
5. MRS. SHANTHI BALASUBRAMANIUM
6. MAYURAPATHY BATHIRAKALI KOVIL
7. MR. K. NEELAKANDAN
8. MR. V. MURUGESU
9. MR. S. PREMNATH
10. OVERSEAS AUTOMOTIVE (PVT) LTD
11. OCEANICK IMPEX
12. LUXMI PRINTERS
13. VAHINI JEWELLERY
14. SINDU JEWELLERY
15. MR. S. PUVANAKUMAR
16. MR. M. PACKYANATHAN

**தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக் - கொள்வர் பயன்தெரி வார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. MR. R. DHARMARAJAH
18. MR. K. THEVATHAS
19. MRS. S. SIVANESAN
20. MR. P. BALAKRISHNAN
21. MR. T. EMMANUAL
22. JANATHA STEELS
23. LIONS CLUB OF COLOMBO CITY
24. THE TRIYO ENTERPRISES
25. NITHSSUE & NITHSSUE IMPORTERS
26. HATTON NATIONAL BANK
27. FAHIM FASHIONABLE GENTS TAILORS
28. NEW PETTAH TAILORS
29. MR. A. KUMARAVEL
30. RAJESWARY INSTITUTE
31. KALA JEWELLERS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளம் கவர்ந்து எழுந்து ஓங்குசினம் காத்துக்
கொள்ளும் குணமே குணம் என்க - வெள்ளம்
தடுத்தல் அரிதோ தடம் கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ விளம்பு.

(பொங்கிவரும் வெள்ளத்தினைக் கரை போட்டுத் தடுப்பது அரிதோ அல்லது கரையைப் போர்த்து வெள்ளத்தை வெளியே விடுவது அரிதோ சொல்வாயாக. உள்ளத்தைக் கொள்ளை கொண்டு சீறி எழுகின்ற கோபத்தை அடக்கிக் கொள்கின்ற அரிய குணமே குணம் என்று அறிவாய்).

கான மயில் ஆடக் கண்டிருந்த வான் கோழி
தானும் அதுவாகப் பாவித்துத் - தானும் தன்
பொல்லாச் சிறகை விரித்து ஆடினால் போலுமே
கல்லாதான் கற்ற கவி.

(ஆழ்ந்த கல்வி அறிவு இல்லாதவன் கற்ற கவி பிறர் சொல்லக் கேட்டு அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கற்றுக் கொண்டு பிரசங்கம் செய்தால் அது எப்படி இருக்கும தெரியுமா? காட்டிலே உள்ள மயில் தனது இயற்கையான அழகிய தோகையை விரித்து ஆட, அதனைப் பார்த்திருந்த வாண் கோழி தானும் மயில் என்று எண்ணி அழகில்லாத தனது சிறகை விரித்து ஆடியது போலாகும்)

- ஔவையார் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிநாயகம் அடிகள்

பிறந்த பொழுது சேவியர் என்று பெயர் இடப்பட்டிருந்தவர் தனக்குத்தானே தனி நாயகம் என்ற பெயரையும் சேர்த்துக் கொண்டது எவ்வளவு பொருத்தமாகி விட்டது. ஆம், தனி நாயகம் அடிகள் ஒரு தனி நாயகமே. தன்னிகரில்லாத் தனி நாயகம் என்று கூடச் சொல்லலாம்.

"திறமான புலமை எனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்" தேமதுரத் தமிழோசை உலக மெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் தமிழ் மக்களே, நீங்கள் அப்படிச் செய்யாவிட்டால் நாமும் தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந்திடுதல் நன்றோ சொல்வீர்" என்று கதறிக் கேட்டு விட்டுப் பாரதி இறந்து விட்டான். ஆனால் தமிழ் மக்கள் அவரின் அந்த ஆசையைத் தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்ற விருப்பத்தை, வேண்டுகோளை மறைவாகத் தமக்குள்ளே பேசிக் கொண்டிருந்தார்களே அன்றி அதை உலகமெலாம் பரவும் வகை செய்வதற்கு எவரும் முன்வரவில்லை. தனி நாயகம் அடிகள் அதைச்செய்ய முன்வந்தார்கள், செய்தும் காட்டினார்கள்.

கனகசேகரம் மஞ்சுதன்
ஆண்டு 13 D

★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மாணவர் மன்றம்
## வகுப்புப் பிரதிநிதிகள்

**ஆண்டு 9 A**
ஏ. ஆர். திருச்செந்தூரன்
எஸ். மயூரன்
ரி. சுதர்சன்

**ஆண்டு 9 B**
பி. கார்த்திக்
எஸ். விக்னேஸ்வரன்
ஜி. நவரோஸ்

**ஆண்டு 9 C**
வை. மயூரன்
எம். சிவசிதம்பரம்
பி. ரமேஷ்

**ஆண்டு 9 D**
பி. ஞானதீபன்
ரி. ஜெனீவன்
ஐ. திலீபன்

**ஆண்டு 9 E**
ரி. கரிகரன்
எஸ். டயான்பிரதாப்
ஆர். வசந்தகுமார்

**ஆண்டு 10 A**
ச. வித்தியசாங்கர்
சி. மதன்
ந. கோபிதரன்

**ஆண்டு 10 B**
ரி. சரவணக்குமார்
ஏ. வஜ்னி ஷியான்
கே. ஜணார்த்தனன்

**ஆண்டு 10 C**
என். காசிராஜன்
பி. சாயிமாதவன்
எம். பிரேம்நாத்

**ஆண்டு 10 D**
அ. விதுர்சன்
சு. புவனாகரன்
க. சாந்தகுமார்

**ஆண்டு 10 E**
ஆர். கிரிசகிஸன்
ரி. மதனகோபால்
எம். சுதர்ஸன்

**ஆண்டு 11 A**
எஸ். யதுகுலன்
ஆர். சுதர்ஸன்
ஆர். மயூரன்

**ஆண்டு 11 B**
ஆர். அகிலன்
பி. ஜெகன்
ஆர். ரமேஸ்

**ஆண்டு 11 C**
என். பிரபாகரன்
எஸ். தீனேஷ்குமார்
ஆர். சுதர்ஸன்

**ஆண்டு 11 D**
எஸ். சிவகங்கன்
எஸ். மகேந்திரகுமார்

**ஆண்டு 11 E**
எஸ். சதீஸ்
அ. பாலபிரநாந்
சோ. விக்னேஸ்வரன்

**ஆண்டு 11 F**
ரி. ஜெகரூபன்
எஸ். ஜெனர்த்தனன்
எஸ். ராகுலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மாணவர் மன்றம்
# வகுப்புப் பிரதிநிதிகள்

**ஆண்டு 6 A**
எஸ்.எழில்குமரன்
எம்.சாய்ரமணா
ஆர்.ருக்ஷான்

**ஆண்டு 6 B**
எல்.சங்கர்
எஸ்.சுபானத்
கே.ஜனகன்

**ஆண்டு 6 C**
எம்.கோபிநாத்
ஆர்.அபேதன்
எஸ்.சிவரமணன்

**ஆண்டு 6 D**
தே. ரஜீவ்
செ. லம்போதரன்
ச. சாமரன்

**ஆண்டு 6 E**
ஆர்.சங்கர்
ரி.சுமன்
எல்.கார்தீபன்

**ஆண்டு 7 A**
எஸ்.கிரிகரன்
எஸ்.பிரசன்னா
எஸ்.விபுலாசன்

**ஆண்டு 7 B**
எஸ்.அஜந்தன்
எஸ்.பத்மஜெயன்
எஸ்.சரவணன்

**ஆண்டு 7 C**
பி.சயந்தன்
கே.விஜயகுமார்
எஸ்.பிரவீன்குமார்

**ஆண்டு 7 D**
வி.வசந்தன்
ஜி.செந்தில்நாத்
எஸ்.குருகுலன்

**ஆண்டு 7 E**
என்.கோபிநாத்
எஸ்.நிரோசன்
எம்.ஜலாஜி

**ஆண்டு 7 F**
எஸ்.சேயோன்
வி.ஜனார்த்தனன்
எஸ்.சிறிகணேசன்

**ஆண்டு 8 A**
ஜே.கிருபேந்திரன்
எஸ்.ஜனகன்
வி.திவாகர்

**ஆண்டு 8 B**
ரி.திசைரதன்
எஸ்.ராஜ்ரூபான்
எம்.சஞ்சீவன்

**ஆண்டு 8 C**
கே.ஜே.பிரதீபன்
எம்.சஜித்
எஸ்.சுதர்ஷன்

**ஆண்டு 8 D**
ஏ.ஜ.நெல்சன்
ஆர்.செந்தூரன்
எம்.திவாகரன்

**ஆண்டு 8 E**
வி.சுகேந்திரன்
வை.செந்தூரன்
ஆர்.அரவிந்தன்

**ஆண்டு 8 F**
எஸ்.சிவகுமார்
ஆர்.சுரேஸ்குமார்
பி.டினேஸ்

குழல் இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்-மழலைச்சொல் கேளா தவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மாணவர் மன்றம்
# வகுப்புப் பிரதிநிதிகள்

### ஆண்டு 12 A
அ. அருட்செல்வன்
ரி. செல்லப்பா
வி. பிரதீபன்

### ஆண்டு 12 B
ஐ. கோபிநாத்
ஜே. சபேசன்
எஸ். கார்வண்ணன்

### ஆண்டு 12 C
இ. செந்தில்குமரன்
கே. கனேபனதன்
ஜேஜெயரூபன்

### ஆண்டு 12 D
கே. மஞ்சுதன்
ம. ஜனார்த்தனன்
எஸ். மகிந்தன்

### ஆண்டு 12 E
எம். எம். கிஷோர்
எஸ். பிரணவன்
பி. ஜி. பிரதீஸ்

### ஆண்டு 12 F
வை. ஜெயந்
பி. சிவகுமார்
எஸ். முருகானந்தன்

### ஆண்டு 12 Arts
எஸ். ஸ்ரீரங்கன்
எஸ். சதீகாந்
ஆர். ரஞ்ஜித்

## மீண்டும் உங்களுடன்.....!

உங்கள் கைகளில் மொட்டவிழ்த்து மணம் வீசிக் கொண்டிருக்கும் மலரிலே, எமது கல்லூரி மாணவர்களின் ஆக்கங்களுடன் உங்களுடைய அறிவுப் பசியைப் போக்கும் நோக்குடன்,

"கற்றது கைம் மண்ணளவு
கல்லாதது கடலளவு"

எனும் கூற்றிற்கிணங்கவும், உங்கள் அறிவுக் களஞ்சியத்தைப் பெருக்கும் நோக்குடனும் கலை, கலாச்சாரம், மதம், பண்பாடு ஆகிய பல்வேறு அம்சங்களையும் இங்கே அச்சேற்றித் தந்துள்ளோம்.

இந்தத் 'தமிழ் தீபம்' மலரானது உங்கள் இல்லங்கள் தோறும் பேணப்பட வேண்டிய ஒர் ஏடாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

நன்றி

இவ்வண்ணம்
சஞ்சீவ் சிலுவைதாஸ்
(உப இதழாசிரியர்)

இனிய உளவாக இன்னாத கூறல்-கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமும் அதனை ஒரு முகப்படுத்தும் வழியும்

கேடுகள் பூமியில் இருந்தும் வானத்தில் இருத்தும் உருக் கொள்வதில்லை. அவைகள் மனித மனத்தில் இருந்தே சிருஷ்டிக்கப்படுகின்றன.

பால், அதிக சத்து நிறைந்த உணவாயினும் கெட்டால் நஞ்சுத்தன்மையாகும். அது போலவே மனத்தால் வாழுகின்ற மனித மனமும் கெட்டு விட்டால் இவ்வையகம் முழுவதும் கெட்டுவிடும். இதுவே இன்றைய உலகின் நிலையாகும்.

"அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு" என்பது பழமொழி, இதற்கேற்ப மனிதனின் பேராசைகளும், அறியாமைகளும், நாளுக்குநாள் ஏற்படும் ஏமாற்றங்களினால் அவன் தன்னம்பிக்கை இழந்து விடுகின்றான். இப்படிப்பட்ட ஏமாற்றங்களாலும் துர்க்குணங்களாலுமே இன்றைய உலகு அழிவுகளுக்கு இலக்காகின்றது. ஒரு சில மனிதர்கள் எவ்வளவுதான் உயர்ந்த குணமுடையவர்களாக இருந்தாலும் தமது சொந்த விருப்பு வெறுப்புகளுக்குப் பங்கம் விளையும் போது அவர்களது சுபாவம் கொடிய விலங்கைவிட மூர்க்க குணமுடையதாக மாறிவிடுகிறது. இப்படிப்பட்ட பகைமைக்குணம், சமுதாயத்தையே அழித்து விடும். ஒவ்வொரு மனிதனும் தன் மனச்சாட்சியை சரிநிலையில் வைத்துக் காரிய காரணங்களைப் பார்க்கப் பழகுவானாயின் அதுவே அவனை நற்குண சீலனாக மாற்றும்.

இவ்விதமாகத் தாவித்திரியும் மனத்தை ஒருமுகப்படுத்த சிறந்த வழி தியானம் செய்வதேயாகும். தியானம் மனத்தில் அமைதியையும், சாந்தநிலையையும், அன்பையும் பெருக்குகின்றது. தியானம் செய்யச் செய்ய ஆத்மீக தர்மமும் மேலோங்குவதாக அமையும். ஒரு மனிதன் தன் மனத்தை ஒருமுகப்படுத்த முயலும் போது அவனது சிந்திக்கும் ஆற்றலும் வளர்ந்து கொண்டே செல்லும். தான் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் அதனால் ஏற்படும் நன்மை தீமைகளையும் உணர்ந்தே செய்வான். எக்காரியத்திலும் நிதானமாக இருப்பான். எனவே அவனை அவன், மனம் தீய வழிகளில் செல்ல அனுமதிக்காது. "காற்றுள்ள போதே தூற்றிக் கொள்".

நமது உணர்வு மாற்றத்திற்கு, உருண்டோடும் காலம் காத்து நிற்பதில்லை. இனியாவது மனித சமுதாயம் போய்க் கொண்டிருக்கும் பாதையைப்பற்றிச் சரியான அறிவுடையவர்களாகா விட்டால் எதிர்காலம் அமங்கலகரமான பல சம்பவங்களாலும், தீய மாற்றங்களாலும் பாதிக்கப்படும்.

உலக சமுதாயத்தின் இரு பெரும் கண்களாகிய அரசதர்மமும், ஆத்மீக தர்மமும் அந்தரங்க சக்தியுடன் சரியான இலட்சியத்திலே செயற்பட்டு உயர்ந்த சீலமுடைய மனித சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.

"மனிதனின் மன மாற்றம்
அவன் வாழ்வில் தடுமாற்றம்
உண்மை யறியாதவன் மனம் சுயநலம்
அவன் பேச்சிலோ பொது நலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலும் தெரிந்தவனே
நல்லதைப்பிரித்தறிவான்
நான்கு வரியைக் கற்றவன், தான்
சொல்வதே உண்மை என்பான்.

உண்மையைப் போதிக்க
போதனையாளர் வேண்டும் - அவரின்
உண்மை உழைப்புத்தான் வேண்டும்,
வேண்டும், வேண்டும் - அவசியம்
வேண்டும் குற்றுயிராய்க்கிடக்கும்
மனித மனம் உயிர்ப் பெற வேண்டும்.

பொருள் அறியா கட்டுப்பாடான வாழ்க்கை - அதில்
உண்மைத் தத்துவம் இருந்ததுண்டா - அதை
மனிதமனம் அறியச் செய்ய
தினம் தினம் தியானம் வேண்டும்.

“மனமுண்டானால் இடமுண்டு”
ஓம் சாந்தி

அருட்சோதி அருட்செல்வன்
விஞ்ஞானப் பிரிவு
ஆண்டு 13,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை தாய் பேண்

"தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை
தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை"

என்பது ஆன்றோர் வாக்கு. இரண்டே இரண்டு எழுத்துக்களால் ஆக்கப்பட்ட தாய் என்ற புனிதமான வார்த்தையில் புதைந்து கிடக்கும் உயரிய தத்துவங்கள் எத்தனை! எத்தனை! அம்மா என்று அழைக்கும் போது வாயில் அமுதூறுவது போல் அல்லவா இருக்கும்!

இக்காலத்தில் கடவுள் இருக்கிறாரா? கடவுளை நீ கண்டாயா? என்று கேட்பவர்களுக்குச் சிறந்த பதிலடியாக அமைவது ஔவைப்பாட்டியின் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற பொன் மொழியாகும். ஆம், தாயானவள் எம்மைப்பத்து மாதம் தாங்கிப் பெற்றெடுக்கிறாள். எமக்கு நோய் ஏற்படும் போதெல்லாம் தான் மருந்துண்டு தன்னுயிரிலும் மேலாக எம்மைக் காத்து வளர்க்கிறாள்.

ஒரு தாய் தன் மகன் உலகம் போற்றும் அறிஞனாகவும் ஆண்சிங்கத்தைப் போன்று அஞ்சாத நெஞ்சம் கொண்டவனாகவும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறாள். அவள் தன் குழந்தைக்குப்பாலை மட்டுமா ஊட்டுகிறாள்? இல்லவே இல்லை தன் மகன் அடைய வேண்டிய உயர் நிலைகளுக்கு வித்திட்டு அன்பு, கருணை, வீரம் என்பவற்றையும் சேர்த்து ஊட்டுகின்றாள். இதனையே கவிஞரும்

"தாய்ப்பாலில் வீரம் கண்டேன்
தாலாட்டில் தமிழைக் கண்டேன்."

என்று தாயின் சிறப்பை எடுத்துக் கூறியுள்ளார்.

தந்தையானவர் வெயில் மழைபாராது நெற்றி வியர்வை நிலத்திலே சிந்த உழைத்து எமக்கு நல்லுணவு, உடை, முதலியவற்றைப் பெற்றுத் தருகிறார். "தாயோடு அறு சுவைபோம் தந்தையோடு கல்விபோம்" என்ற கூற்றிற்கிணங்க தந்தையானவர் தன் மகனை அவயத்து முந்தியிருக்க செய்பவர். அதாவது ஒரு பிதா தன் மகனை சபையில்முதல்வன் ஆக்குவதையே தனது முழுமூச்செனக் கொண்டு செயற்படுபவர். இதனையே திருவள்ளுவரும்,

"தந்தை மகற்காற்றும் உதவி
அவயத்து முந்தியிருக்கச் செயல்

என்று தனது முத்தான குறளின் மூலம் விளக்கியுள்ளார்.

அத்துடன் கல்வி, நல்லொழுக்கம், தீயாரோடு சேராமை போன்ற நற்பண்புகளை வளர்ப்பவர் தந்தையன்றோ. இதனாலேயே "தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை" என்ற பொன்மொழி எம் மனத்தில் "கல்மேல் எழுத்துப் போல்" பதிந்து நீடு வாழ்கின்றது.

எனவே, தந்தையும் தாயும் கண்கண்ட தெய்வங்களாகப் போற்றப்பட வேண்டியவர்கள். இவர்கள் நோயுற்ற காலத்திலோ வயோதிபக் காலத்திலோ இவர்களுக்கு வேண்டிய உதவிகளை மனங் கோணாது செய்தல் வேண்டும். இவர்களது இலட்சியக் கனவை நாம் நனவாக்க வேண்டும்.

"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்டதாய்"

ஒரு தாய் தன் மகன் அறிஞனாகவும் பண்புள்ளவனாகவும் இருக்கிறான் எனக் கேட்கும் போது தன் மகனைப்பெற்றெடுத்த ஆனந்தத்தை விட பேரானந்தம் கொள்கிறாள். இவர்களது நல்லாசியால் நமது வாழ்வு சிறப்புறும் என்பதில் ஐயம் இல்லை.

**பாலகுமார் சத்யன்**
ஆண்டு 8E
முதலாமிடம்
மத்திய பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழன்னை

"பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே வளர்ந்து சங்கத்
திருப்பிலே இருந்து வைகை ஏட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்தோரென
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளர்கின்றாள்"

எங்கள் தமிழ் மொழியைத் தமிழ் மக்கள் தங்கள் உயிரினும் மேலாகக் காத்து வந்த வரலாறு மிகவும் பெருமைக்குரியது. அகிலத்தில் தோன்றிய பல்வேறு மொழிகள் வழக்கொழிந்து சிதைவுற்றுப் போன நிலையிலும் தமிழ் மொழி மாத்திரம் "கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த தமிழ் " என முன்னுள்ளோர்கூடக் கூற இயலாத மூப்புப் பெற்றுப் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே இந்தியாவின் வடக்கு வேங்கடம் முதற்கொண்டு தெற்கே ஈழம் வரை வாழ்ந்து வந்த மக்களால் பேசப்பட்டு வந்தது எனின் மிகையாகாது.

தமிழ் என்றால் "இனிமை" எனப் பொருள்படும் என்பதை நம் தமிழ் இலக்கியங்கள் எடுத்து இயம்புவதைக் காணலாம். "தமிழ் என்னும் இனிய தீஞ்சொற்றையல்" என்று மணிமேகலையும், "இனிமையும் நீர்மையும் தமிழ் எனவாகும்" என பிங்கல நிகண்டும் எடுத்துக் கூறுகின்றன. தமிழ் மொழி, செய்யுள் வகையிலும் பண்பாட்டுச் சிறப்பிலும் தலை சிறந்தது என்பது வெள்ளிடை மலை. ஏனைய மொழிகளைப் போல் கலப்பின்றித் தானாக இயங்கி இன்பந்தர வல்லது. அன்புத் தமிழ், இன்பத் தமிழ், ஞானத்தமிழ், அழகு தமிழ், செந்தமிழ், தீந்தமிழ், ஒண்டமிழ் என்றெல்லாம் வாயாராப் போற்றி மகிழ்ந்தவர்கள், தமிழ் என்ற அணங்கை அலங்கரித்த எமது புலவர் எழுவரை நாம் மறக்கலாமா?

"வெண்பாவில் புகழேந்தி பரணிக்கோர் செயங் கொண்டார் விருத்தம் எனும் ஒன்பாவிற்கு உயர் கம்பர் கோவை, உலா, அந்தாதிக்கு ஒட்டக் கூத்தர் வசைபாடக் காள மேகம்" என்னும் பாடல் இதற்கு எடுத்துக் காட்டாகும்.

தமிழை நன்கறிந்த புலவர்கள் தமிழரின் உயிர் நாடிகளெனப் போற்றப்படும் திருக்குறள், மணிமேகலை, சிலப்பதிகாரம், பாரதம், இராமாயணம் போன்ற அரிய இலக்கிய நூல்களை எல்லாம் இயற்றித் தந்து தமிழை வென்ற மொழி வேறில்லை என்று நிரூபித்து விட்டார்கள்.

"யாமறிந்த மொழிகளில் தமிழ் மொழி போல் இனிதாவ தெங்கும் காணோம்" என்று பாரதியும், "தமிழுக்கும் அமுதென்று பேர் அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று பாரதி தாசனும், "நறை பழுத்த தீந்தமிழின் ஒழுகு நறுஞ்சுவையே" என்று குமர குருபரரும் தமிழின் பெருமையை எடுத்துக் கூறுகிறார்கள் எனின் அவர்கள் தமிழ் மொழியை எவ்வளவு தூரம் சுவைத்திருப்பார்கள் என்பது தெரிகிறதல்லவா?

"தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்ற பாரதியின் கனவைத் தமிழர்களாகிய நாமெல்லோரும் நனவாக்கிப் பெருமையடைவோமாக.
"ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி எழில் கொண்டு வாழியவே! எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி என்றென்றும் வாழியவே!

க. கிரிசாந்
ஆண்டு 4 A
(இரண்டாமிடம்)
கீழ்ப்பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் இனியவளுக்காக......

இரவும் பகலும் யோசிக்கிறேன்,
தினமும் உன்னையே நேசிக்கிறேன்.
கனவுக்குள் நீநின்று குரல்கொடுத்தாய் – என்
கவிதைக்கு உன் வார்த்தை வரம் கொடுத்தாய்
கண்ணுக்குள் தூக்கத்தைச் சிறையெடுத்தாய்,
இதமாக என்னெஞ்சைக் கொளுத்தி விட்டாய்
உன்னை நான் பார்த்தவுடன் நெஞ்சுக்குள்ளே – அடி
உட்சிறகு ஒரு லட்சம் முளைக்கக் கண்டேன்.
விண்ணைப் போய் முட்டிவிடக் கூடாதென்றே – இன்று
விரிகின்ற சிறகுகளைச் சுருக்கிக் கொண்டேன்.

எழுதிவைத்தேன் கடிதம் ஒன்று
அஞ்சல் செய்யவில்லை – அதில்
உந்தன் பேரைத் தவிர அன்பே
வேறு வார்த்தை இல்லை.
நெஞ்சில் உள்ள ஆசை ஒன்றைச்
சொல்லியாக வேண்டும்,
கண்ணே உந்தன் கன்னம் தன்னில்
நான் புள்ளியாக வேண்டும்.
நீண்ட நாளாய் பூக்கள் சேர்த்தேன்,
உன்னை எண்ணி மாலை கோர்த்தேன்.
தூரம் நின்று நானும் பார்த்தேன்,
என்னை நானே காவல் காத்தேன்.
காதல் ராகம் தரும்
அதில் நனைந்தால் தாகம் வரும்,
விழிகளிலே காதல் விழா
நடத்துகிறாள்;

சாகுந்தலா........

*சஞ்சீவ் சிலுவைதாஸ்*
ஆண்டு 13 B
(விஞ்ஞானப் பிரிவு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதமும் மனிதனும்

அன்று மதங்கள் மனிதனை ஆக்கின
இன்று மதங்கள் மனிதனைத் தாக்கின

மதத்தில் அன்று இறைவன் இருந்தான்
மதத்தில் இன்று மனிதன் புகுந்தான்

இறைவனை மனிதன் அன்று வணங்கினான்
மனிதனை மனிதன் இன்று வணங்கினான்

மதத்தில் ஒற்றுமை இருந்தது அன்று
மதத்தில் வேற்றுமை பிறந்தது இன்று

மதத்தின் பெயரால் கட்சிகள் தோன்றின
மதத்தில் அரசியலைப் புகுத்தினான் மனிதன்

இதனால் இறைவன் விலகிச் சென்றான்
மனிதன் நாளும் மனிதனைக் கொன்றான்

மதத்தின் பெயரால் வன்முறை வளர்ந்தது
மதத்தின் பெயரால் உயிர்ப்பலி மலிந்தது

இறைவன் கண்ணில் தினமும் நீர்த்துளி
துயரைத் தீர்க்கவே பாலினை அருந்தினான்

ஏனோ மனிதா இந்த மதவெறி
என்று தீருமோ இந்த மதவெறி

தீருமன்றே இறைவன் மீண்டும் வருவான்
மதங்கள் மீண்டும் மனிதனை ஆக்கும்.

ந. அரவிந்தன்
ஆண்டு 13 D
பௌதீக விஞ்ஞானம்

பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த மக்கட்பேறு அல்ல பிற.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை அழகு

கவிதை என்பது இன்னதுதான் என வரைவிலக்கணம் கூறுவது வலிதாகும். ஆயினும் கவிதையின் பொதுவான இயல்பைக்கூறலாம். ஒரு கவிஞனின் உள்ளத்தில் தோன்றும் ஒரு கருத்தையோ, பல கருத்துக்களையோ இயல்பாக, உணர்ச்சிமயமான வடிவில் ஒன்று சேர்ப்பதே அதுவாகும். ஒரு கவிதைக்கு அழகு சேர்ப்பது அதனைப்படைக்கும் கவிஞனின் கருத்துக்களும், கவிதையின் பண்புகளான கற்பனை, உவமை, உணர்ச்சி வெளிப்பாடு, ஓசைநயம் என்பவைகளுமாகும்.

கற்பனையே கவிதைக்குக் கண் போன்றது. இந்தக்கற்பனை என்றால் என்ன? இயற்கைக்கு மாறானவற்றைப் புனைதல் என்பது இதற்குப் பொருந்தாது. அதாவது, புலன்களால் காணக்கிடைக்காத காட்சிகளையோ, பொருள்களையோ கண்டதாக நினைத்து அதைச் சொல்லுருவில் வடித்தலுக்கு உதவும் ஒரு வகை அபாரசக்தி எனலாம்.

"மஞ்சள் குளித்து முகமினுக்கி
மாயப்பொடிபூசி நிற்கும் நிலை
கஞ்சமலர் வந்து காணில் சகிக்குமோ
கண்ணீர் உகுக்குமோ யாரறிவார்"

இங்கு, சூரியனை நோக்கி வளைந்து வளர்ந்திருக்கும் சூரியகாந்திப் பூவினைப்பற்றியதாக உள்ளது. மஞ்சள் நிறமான சூரியகாந்திப்பூ இவ்வாறு வளைந்து வளர்ந்து சூரியதேவனைக் காதல் செய்யத் தூண்டும் விதத்தில் இருப்பதைச் சூரியனின் மனைவி தாமரை கண்டால் என்ன நினைக்கும் என்பதாகக் கற்பனை பண்ணி சொல்லுருவில் வடிக்கப்பட்ட இக்கவிதை அழகுநயம் மிக்கதாக விளங்குகிறதன்றோ! அடுத்து, கவிதைக்கழகுசெய்யும் பண்பான உவமையழகை நோக்குவோம்.

"மால்கடிந்த தவமுனி வான்மீகி என்பான்
வனத்திடையே தான் கண்டு கொண்டுவந்த
பால்படிந்து முள்ளடர்ந்து பதத்து நீண்டு
பரிவளித்த பலாவின்கனி பாருக்கீந்தான்
மேல் படிந்த பிசினகற்றி மெல்லக் கீறி
மெதுவாகச் சுளையெடுத்து தேனும்வார்த்து
நூல்படிந்த மனத்தினருக்கு விருந்து வைத்தான்"
கம்பனென்ற தமிழ்த்தாயார் போற்றமைந்தன்

ஆஸ்தான கவிஞர் த. இராமலிங்கபிள்ளை அவர்களால் இயற்றப்பட்ட கவியிது. முதனூலான வான்மீகி இராமாயணதிற்கும், வழிநூலான கம்பராமாயணத்திற்கும் இடையிலுள்ள தொடர்புபற்றியதாக இப்பாடல் விளங்குகிறது. அழகிய உவமைநயம்மிக்க கவிதையிது.

ஒருவர் ஒருகருத்தைப் பலவாறாகக் கூறலாம் ஆயினும் வாசகர் நன்கறிந்த பொருள் ஒன்றோடு ஒப்பிட்டு அவர் அறியாத கருத்தை விளக்குவதே சாலச்சிறந்தது. இது உவமை எனப்படுகிறது. இங்கு தமிழர் நன்கறிந்த முக்கனிகளுள் ஒன்றாகிய பலா இந்நூல்களிரண்டிற்கும் உவமையணியாக்கப்பட்டுள்ளது. பலாஎப்போதுமே சுவை பயப்பது ஆனால் பால்படிந்து, முள்ளடர்ந்து , பருத்து, நீண்டு உள்ள பாலாக்கனி சுவை பயக்குமா என்பது சந்தேகமே. இதுபோன்றதே வான்மீகி இராமாயணமும், ஆனால் "பலாவின் சுவையை நன்கறிந்த கம்பன் அதன் மேல் படிந்த பிசினகற்றி உள்ளிருந்த பழரசம் சிறிதும் சிந்துண்ணாமல் மெல்லக்கீறி மெதுவாகச் சுளையெடுத்து தமிழர்களுக்குத் தேனும் கலந்து விருந்து வைத்தான்" என்கிறது பாடல். இவ்வுவமையணி கவிதைக்கழகு சேர்ப்பதிலும், இலகுவில் பொருளை விளக்குவதிலும் சூரனன்றோ.

கவிதைக்கு அழகு சேர்க்கும் மற்றொரு காரணி உணர்ச்சி வெளிப்பாடாகும். அறிவின் வேலையை விட உணர்ச்சியின் பங்குதான் கவிதைக்கு முக்கியமானது. புலவன் ஒருவனுக்கு சுதந்திரத்தாகம் அதிகரித்தது. சுதந்திர உணர்ச்சி கரை புரண்டு ஓடியது. இதை எல்லோருக்கும் ஊட்ட நினைத்து எழுமின் . விழிமின்" என வீறிட்டான், சுதந்திரத்தை விட மேலானதொன்று இருக்கின்றதா என எதிர்மறை வினாத்தொடுத்தான், அதற்குத் தானே விடையும் பகர்ந்தான் அந்த உணர்ச்சி பூர்வமான பாடல் இவ்வாறமைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வீரசுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்
வேறொன்று கொள்வாரோ – என்றும்
ஆரமுதுண்ணுதற் காசை கொண்டார் கள்ளில்
அறிவை செலுத்துவாரோ"

என்பதுதான் அப்பாடல். இது ஒரு பாரதி பாடல் ஆகும்.

இனி ஓசைநயம் பற்றிப்பார்ப்போம், இப்பாடலை வாசியுங்கள்

"தூங்குசிறை வாவலுறை தொன்மரங்களன்ன
ஓங்குகுலம் நையலதன் உட்பிறந்த வீரர்
தாங்கல் கடனாகுமது தாக்கவருதீஞ்சொல்
நீங்கல் கடனாகுமெதிரென் றெழுந்து போனான்"

பா(கவிதை) என்பது விரிந்து பட்டுச் செல்லும் ஓசையே என்பர் பேராசிரியர். விளங்காததையும் விளங்கவைப்பது முக்கியமானது. மேற்குறிப்பிட்டபாடலில் தானதன தானதன தானதான தான என்ற மெட்டுடன் கூடிய ஓசை உள்ளது. மற்றும் செய்யுளின் நான்கு வரிகளிலும் முதற்சொற்களால் வரும் தூங்கு, ஓங்கு, தாங்கல், நீங்கல், அகியவற்றில் "ங்" என்ற எழுத்து ஓசைநயம்பற்றிப் படிபோர்க்கு மனதில் இனிமை பயப்பதாகவும் உள்ளது.

கவிதையின் அழகு தங்கியுள்ள மிகமுக்கிய காரணி கவிஞனின் கருத்தாகும். நாம் அன்றாடம் பல நிகழ்ச்சிகளைக் காண்கின்றோம் உடனேயே அதனை மறந்தும் விடுகின்றோம். ஆனால் கவிஞனின் அகக்கண்களுக்குப் புலப்படும் காட்சிகள் அவனது உயரிய கருத்துக்கேற்ப அழகிய கவிதை வரிகளாகின்றன. கவிஞன் ஒருவன் நீரை உற்று நோக்குகின்றான். அதன் மூன்று இயல்புகளான குமிழி, திரை, நீரில், எழுதும் எழுத்து முதலியவற்றையும் அறிகிறான்.

"நீரிற் குமிழி நிறைசெல்வம்
நீரிற் சுருட்டும் நெடுந்திரைகள் – நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காள் – என்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று"

அதாவது, நீரில் தோன்றும் குமிழி. திரை, எழுத்து ஆகியன மனித வாழ்வின் இளமை, செல்வம், உடம்பு ஆகியவைகளாகக் கூறி அவை அழிவது போல மனிதவாழ்வின் நிலைகளான இளமை, செல்வம், உடம்பு என்பனவும் அழிந்துவிடும். ஆகையால், நிலையானதாகிய இறைவனை வழிபடுதல் மூலம் நாம் நிலையானவர்களாகலாம். என்று மறைமுகமாகக் கூறுகிறது இப்பாடல். எவ்வளவு உயரியகருத்து இங்கு பொதிந்துள்ளது! எனவே நாமும் இத்தகைய அழகுநயம்மிக்க கவிதைகள் பலகற்று பலன் பல பெறுவோமாக.

**சி. சங்கர்**
ஆண்டு 11E
முதலாமிடம்
மேற்பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநோத உலகின் விபரீதங்கள்

காலிமுகத்திடலிலே, பொன்மாலைப் பொழுதினிலே, மாலை வெயில் தனது பொன்நிறத்தால் இருபத்தொரு வயதை முடிக்கப்போகும் ராகேஷை அலங்கரித்துக் கொண்டிருந்தது. இதமான தென்றல் ராகேஷை சுகமாக வருடிச்சென்றது. ஆனால், இந்த இன்பமான வேளையிலும் ராகேஷ் சோகமாக இருந்ததை அவனது கலைந்த தலையும், கசங்கிய உடைகளும், ஒரு கிழமைத்தாடியும் வெளிப்படுத்திக்கொண்டிருந்தது.

ராகேஷின் வாழ்க்கையிலே இரு வருடங்களைப் பின்நோக்கிப் புரட்டினால் அழகான மகிழ்ச்சியான ராகேஷ் சராசரி வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்ததைக் காணலாம். அதுவும் அவன் வாழ்விலே நிரோஷா, புதியதோர் அத்தியாயமாகக் குறுக்கிட்ட வரையுமே நீடித்தது.

நிரோஷா, பெயரிற்கேற்றவாறு ரோஜாப்பூப் போலவே இருந்தாள். ஆனால் முள் இல்லை. நிரோஷாவைக் கண்டது முதல் ராகேஷின் மனம், அவள் மீது அலைபாயத் தொடங்கியது, காரணத்தை ராகேஷால் கண்டு பிடிக்க முடியவில்லை. நிரோஷாவின் அலைபாயும் கூந்தலும், வெண்மையான தேகமும் ராகேஷின் மனதிலே போராட்டங்களை நடத்தின.

போராட்டத்தின் முடிவிலே ராகேஷ் தன் மனதை நிரோஷாவிடம் வெளிப்படுத்தினான். அவளோ ராகேஷின் கனவுக்கோட்டைகளை கணப்பொழுதில் கட்டுக்குலைய வைத்துவிட்டாள். விரக்தியுற்ற ராகேஷ் உலகமே தன்னைப் பார்த்துச் சிரிப்பதாக எண்ணினான். மேலும் மேற்படிப்பிற்காக நிரோஷா இங்கிலாந்து சென்றுவிட்டதாகவும் அறிந்தான். இந்த இடியான செய்தியைக் கேட்டதும் ராகேஷ் நடுக்கடலில் தனியே திக்கற்றவனாக நிற்பதாக உணர்ந்தான்.

இக்கட்டான நேரத்திலே ராகேஷ்சுக்கு நண்பனாக விநோத் அறிமுகமானான். பகிரங்கங்களை பகிரும் அளவு சிநேகம், பக்குவப்பட்டபின் ராகேஷ் தன் சோகம் நிறைந்த வாழ்க்கையைப்பற்றி அவனிடம் கூறினான்.

விநோத் ராகேஷ்சுக்கு ஆறுதலளிப்பதாகக்கூறி தனது வீட்டிற்கு ஒரு நாள் அழைத்துச் சென்று விநோதமான ஒரு பொருளைச் சுவைக்கக் கொடுத்தான். சுவைத்ததும் ராகேஷ் விநோதமான உலகிற்குச் சென்றான், நிரோஷாவை மறந்தான், உல்லாசமாகத் தான் இருப்பதாக உணர்ந்தான், வாழ்க்கையின் உச்சக்கட்டத்தை அடைந்து விட்டதாக எண்ணினான். இளமையான இரத்தம் சூடாவதாக உணர்ந்தான், மீண்டும் மீண்டும் அப்பொருளைச் சுவைக்க விரும்பினான்.

ஆனால்சில நாட்களின் பின்பு, தான் ராகேஷால் விநோத்தை சந்திக்க முடிந்தது. விநோத் மீண்டும் அப்பொருளைக் கொடுத்தான். போதைப்பொருள் எனக் கூறினான். போதைப்பொருள்களைப்பற்றி நன்கு அறிந்திருந்தும் ராகேஷால் தன் மனதை அந்தவேளை கட்டுப்படுத்த முடியவில்லை. மீண்டும் விநோத உலகிலே சஞ்சரித்தான். இவ்வாறு விநோத உலகிலே சஞ்சரித்துச் சஞ்சரித்தே இரண்டு வருடங்களைக் கழித்து விட்டான்.

இன்று ராகேஷைப் பற்றிக் கவலைப்பட ராகேஷின் உடன்பிறந்த சகோதரன் மகேஷைத் தவிர வேறு யாருமே இல்லை. ராகேஷின் நிலை கண்டு வருந்திய மகேஷ், ராகேஷ்சுக்கு போதைப்பொருள்களின் அபாயகரமான விளைவுகளை எடுத்துரைத்தான், இருவாரங்கள் ராகேஷைத் தனிமைப்படுத்தினான், காவல் துறையினரிடம் போதைப்பொருளை விநியோகிக்கும் குழு பற்றிய அறிக்கைகளைக் கொடுத்தான். ஆனால், பலனோ பூச்சியம் தான்.

ராகேஷால் விநோத உலகிலிருந்து மீள முடியவில்லை. விநோத உலகில் விபரீதங்கள் அவனைச் சூழ்ந்து கொண்டன. கொடிய பல நோய்கள் தொற்றிக்கொண்டன. ராகேஷ் வாழ்க்கையின் இறுதி நாள்களை எண்ணத் தொடங்கினான்.

அவன் வாழ்க்கை முடியப் போகிறது, ஆனால், அவன் கதை வரலாற்றில் இடம் பிடித்து விட்டது. வருங்காலச் சந்ததியினருக்கு ஒரு பாடமாக அமையப் போகிறது.

**நல்லநாதன் பிரபோதரன்**
ஆண்டு 11
முதலாமிடம்
மேற்பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்த்தமிழ் இன்று......

உலக மொழிகள் எல்லாவற்றிற்கும் முத்து முதிர்ந்த முதன்மொழியாய், வழிகாட்டும் ஒளி விளக்காய், வச்சிரத்து இன்பமாய், அழகு மிளிரும், வீரத்தாயின் வேங்கைமொழி திகழ்கின்றது எம்மொழி வானார்ந்த பொதிகையின்மிசை பிறந்து, வள்ளல்களாலும் மும்மன்னர்ளாலும் வளர்க்கப்பட்டது என்பர். அப்பர், சுந்தரர் முதலான திருத்தொண்டர்களினது தேவாரங்களில் தெய்வத்தன்மை ஊட்டப்பட்ட செந்தமிழ்தான் எமது தாய்மொழி. செந்தமிழ் என்று சொல்லும்போதே நாவில் தேன் இனிக்கின்றது.

இத்தனைச்சிறப்பு வாய்ந்த எமது அன்னை மொழிக்கு இந்தக் கலிகாலத்தில் கூற்றுவனின் பார்வைபடத் தொடங்கி விட்டதோ என்று எண்த்தோன்றுகிறது. தமிழராகப் பிறந்தநாமே தமிழ்மொழியின் சீர்குலைவுக்கு முக்கிய காரணர் ஆகின்றோம். காலங்காலமாக வேற்று மொழிச்சொற்களின் கலப்பாலும், நேரடி மொழிபெயர்ப்புக்களாலும், ஆராய்ந்து கற்காத எமது இளைய சமுதாயத்தாலும் தமிழ்மொழிக்கே உரித்தான இலக்கண வரம்பை மீறித்திசைமாறத் தொடங்கிவிட்டது. "தாய்மொழிதான் தமிழ், அதைப்பேசுவதே அவமானம்" என்று கருதும் தமிழ்மைந்தர்கள் வேற்றுமொழிகளில் உரையாடுவதே தமக்கு உயர்வைத்தரும் என எண்ணுகின்றார்கள். இவர்கள் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் மூன்றிலுமே தமது வசதிக்காக முற்றுமுழுதாக வேற்று மொழிகளைக் கலந்துவிடுகின்றார்கள். ஏனிந்தக் கொடுமை? எம்தாய்த் தமிழுக்கு விழா எடுக்கின்றார்கள் தனித்தமிலேயா அக்கருமத்தைப் புரிகின்றார்கள் அங்கு மேலைத்தேய மணம் கமழ்கின்றது, ஆங்கிலமொழி உலாவுகின்றது. தமிழ்மொழிக்கு விழா எடுக்கும் இவர்கள் மறு புறத்தில் தமிழைக் குழிதோண்டிப் புதைக்க முற்படுகிறார்கள்.

இவ்வாறு இன்னல்கள் பல எமது தாய்த்தமிழுக்கு நெருங்கும் நேரத்தில் தாயைப் பாதுகாப்பது எமது கடமையே!

"தாயைச் சேய் பேணல் தலையறம்
நம்மெல்லோர்க்கும் தாய் தமிழேயாதலால்"

இளைஞர்கள் நாம். எதிர்காலம் எம் கைகளில்தான். ஆதலால், இனி ஒரு விதி செய்வோம், அதை எந்நாளும் காப்போம். அறிவு நிரம்பிட, அன்பும், பிறர்மதிப்பும் வளர்ந்திட உறுதி பூணுவோம். அந்த உறுதியில் வளர்ந்ததே இம்மலராம். இது எமது குறிக்கோளின் முதற்படி. அதில் குறைகள் இருப்பின் களைந்து எமக்கு ஆக்கபூர்வமான வழியினைக் காட்ட வேண்டுகிறோம்.

உண்மை மிளிர கீரனார் உரை வகுத்த செந்தமிழ்
ஊக்கமுள்ள வீரர் தம்மை ஆக்குகின்ற தமிழ்மொழி
வண்மை மிக்க பாண்டியன் வளர்த்த செந்தமிழ்மொழி
ஞாலம் எங்கும் பரவி வாழ்க நீடு வாழ்கவே!

ந. அரவிந்தன்
(பௌதீக விஞ்ஞானம்)

அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து-இன்புற்றார் எய்துஞ் சிறப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியம் எமது வாழ்வுக்கண்ணாடி

"மானிடராய்ப் பிறத்தல் அரிதினும் அரிது" எனக் கூறிப்போந்தார் ஔவையார். இத்தகைய பெருமை படைத்த மாந்தருக்கும், மாக்களுக்கும் இடையில் வேறுபாடு யாதெனில் மாந்தர் வெறும் ஒலிகளாலும் சமிக்கைளாலும் மட்டும் அன்றி ஓவியங்களாலும் சிற்பங்களாலும், இலக்கியங்களாலும் தமது உள்ளத்துணர்ச்சிகளை வெளிப்படுத்துகின்றமையே ஆகும். இவற்றுட் சிறப்புடையது இலக்கியம் என்றால் மிகையாகாது. இத்துணைப்பெருமை வாய்ந்த இலக்கியம் எமது வாழ்வுக்கண்ணாடியாகத் திகழ்கின்றது. அதாவது நாம் சாதாரண வாழ்க்கையில், கண்ணாடியின் முன்னின்று எமது புற அழகைநோக்கி, புற அழகின் நிறைகளை மெச்சி, மேலும் மெருகேற்றி, குறைகளைக் கண்டு அவற்றைக் களையவும் முற்படுகின்றோம். அதைப்போன்றுதான் இலக்கியமும் எமதுள்ளத்தின் குறைநிறைகளை, ஏற்றத்தாழ்வுகளை எமக்குத் தெற்றெனப் புலப்படுத்துகிறது. அது எவ்வாறெனின் இலக்கியக் கதாபாத்திரங்களுடன், எம்மை ஒப்பு நோக்க உதவுகிறது. எமது பண்புகளில் சிறந்தவற்றை நாம் பல இலக்கிய கதாபாத்திரங்களில் காணும்போது அந்நற்பண்புகளை மேலும் வளர்ப்பதில் எமக்கு ஆர்வம் ஏற்படுகின்றது. அதேபோல் எம்மிடம் உள்ள தீய குணங்களை விலக்க முயலுகின்றோம். கண்ணாடியிலே புறஅழகை மட்டும் நாம் சீர்திருத்தலாமாயின் "குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சளழகும் அழகல்ல"

என உணர்ந்தவன் கண்ணாடி முன்னின்று தன்னை அலங்கரிப்பதில் அக்கறைகாட்ட மாட்டான். ஆக, கண்ணாடி எமது புற அழகை மட்டும் சீர்படுத்த உதவுவதால் சிறப்புடையதன்று. ஆனால், இலக்கியம் அதையும் தாண்டிப் புனிதமானது. எமது உணர்ச்சிகளைக் கட்டுக்குள் கொண்டுவரவும், அவற்றை ஒருமுகப்படுத்தவும் உதவும் இலக்கியங்கள் மனத்துக்கு அமைதியையும் அளிக்கின்றது. உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த உதவும் இலக்கியமானது உணர்ச்சிகளின் அதீத வெளிப்பாட்டுக்கும் தூண்டுகோலாகின்றது. சிவனைக் கனவிலோ நனவிலோ கண்ட நாயன்மார்களின் மெய், புளகம் அடைவதையும், கண்களில் இருந்து கண்ணீர் தாரையாக வடிவதையும், உணர்ச்சிகளின் அதீத வெளிப்பாட்டுக்கு உதாரணமாகக் காட்டலாம்.

கண்ணாடியானது எட்டு மங்கலப் பொருல் ஒன்று எனத் தொல்காப்பியம் கூறுகிறது. ஆனால் இலக்கியமோ அதையும் மீறி நவரசங்களால் ஆனது. முதலாவதாக இலங்கியங்களிற் காட்டப்படும் வீரத்தினை எடுப்போமாயின் "பேராண்மை என்ப தறுகண் ஒன்று உற்றக்கால் ஊராண்மை மற்றதன் எஃகு"

எனும் குறளை அத்திவாரமாக கொண்டு இராமனின் வீரம் கொடிகட்டிப்பறக்கின்றது.

ஆளையா வுனக்கு அமைந்தன மாருதம் மறைந்த
பூளை ஆயின, கண்டனை! இன்று போய்ப் போர்க்கு
நாளை வா என நல்கினன் நாகு இளம் கமுகின்
வாளை தாவுறு கோசல நாடு உடை வள்ளல்.

எனும் கம்பரின் கூற்றை மனக்கண்ணால் காணும்பொழுது இராமனின் குன்றனைய தோள்களுக்கு எதிரே அரக்கர் தலைவன் தலைகுனிந்து நிற்பதையும் அவனுக்கு வள்ளல் இராமன் விடை கொடுப்பதுவும் தெரிகிறது. இதிலிருந்து வீரத்தின் சிகரத்தை அறிந்து கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னோர் இடத்திலும் வீரம் துளிர்விடுகிறது. பாரதத்திலே செருக்களத்திலே ஜெயிக்கமுடியாத பாண்டவர்களை சூதால்தான் வெல்ல வேண்டும் என்று கௌரவர்களின் மந்திராலோசனையின்போது, அச்சபையிலே கூரிய புத்தியுள்ள சகுனியின் கூற்றையும், பெரியோனான திருதராட்டினன் பேச்சையும் அச்சமின்றித் தட்டித் தனது வீரத்தைப் பறைசாற்றுகிறான், செய்ந்நன்றி மறவாச் செம்மல். ஆம், அவன்தான் கர்ணன்.

"வெஞ்சிலை குனித்து ஓரம்பு யான்விடின்
வெகுண்ட வேந்தர்
அஞ்சி விண்புகுவர் அல்லால் யாவரே
எதிர்க்க வல்லார்
வஞ்சனை கொண்டு வெல்ல மதிப்பது
வாளால் வெல்ல
அஞ்சினம் ஆயின் அன்றோ என்றனன்
அரக்கர் கோமான்.

எனத் தனது வாள் வலியை மட்டுமன்றி தோள்வலியையும் இயம்புகின்றான். இன்று எம்மைப் பெருவீரர் என மார்புதட்டும் நாம் இலக்கிய நாயகர்களின் வீரத்துக்கு முன் எமது வீரத்தை ஒப்பிட்டுப்பார்க்க வேண்டும்.

அடுத்து, காதலை எடுத்துக் கொள்வோமாயின் பாவை ஒருத்தியின் கடைக்கண்ணின் கள்ளப்பார்வைக்கும் சரி தெள்ளிய நிமிர்ந்த பார்வைக்கும் சரி அஞ்சா நெஞ்சமும், தளரா உடற்கட்டும் அவசரக்காரனும், முன்கோபக்காரனுமான வந்தியத்தேவன் குனிந்த தலை நிமிராமல் தன்வசம் இழந்து நிற்கிறான். அவனது வாள்வீசும் திறன் குந்தவையின் கண்களுக்கு முன்னே செயலற்றுப் போய்விடுகிறது. அவளின் வேல் விழிகளில் இருந்து வீசப்படும் காமனின் மலர்க்கணைகளால் அவன்படும் அவஸ்தையைப் பொன்னியின் செல்வனிலே காணலாம்.

"அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்" அக்காதலர் இருவரும் கண்களாலேயே கருத்து பரிமாறிக் கொள்கின்றனர். "செவிக்குணவில்லாத போது சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்" என்பதும் ஒரு கூற்று. ஆனால், கண்கள் ஒன்றை ஒன்று கவர்ந்தபின் அவர்களின் செவிக்குக்கூட உணவு கிடைக்க வில்லைப் போலும். ஆம், அக்காதலர்கள் ஒருவரை ஒருவர் நோக்கியபோது அவர்களுக்குக் கண்களையும் உள்ளத்தையும் தவிர மற்றப்புலன்கள் யாவும் செயல் இழந்து நின்கின்றனாவம்.

புகழேந்திப்புலவர் விளக்கும் காதல் காவியத்தை நோக்குவோமாயின் அங்கு நளன் காதலியைக் காணாமல் அவள் பெயரைக் கேட்டவுடனேயே காதல் வயப்படுகிறான். அவனது நெஞ்சம் இற்றது, எழுந்தது இருங்காதல், அற்றது மானம், அழிந்தது நாணம். அவனது நிலையை.

கேட்ட செவிவழியே கேளாதுணர் வோட
ஓட்டை மனத்தோடு உயிர்தாங்கி – மீட்டுங்
குழியிற் படுகரிபோற் கோமான்கிடந்தான்
தழலிற் படுதளிர்போற் சாய்ந்து

என விளக்கலாம். இதிலிருந்து இலக்கிய நாயகர்தம் காதலை நாம் அறிந்து கொள்ளலாம்.

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது-ஊதியம் இல்லை உயிர்க்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சி என்னும் உணர்வு காவியங்களிலே விளக்கப்படுமாற்றை எடுத்து நோக்குவோமாயின், நளவெண்பாவிலே நாடிழந்து கானகம் சென்ற நளன் திரும்ப வரும்போது நகரமக்கள் பெற்ற மகிழ்ச்சியை,

"கார் பெற்ற தோகையோ கண்பெற்ற வான்முகமோ
நீர் பெற்று உயர்ந்த நிறைபுலமோ
பார் பெற்று மாதோடு மன்னன் வரக்கண்ட
மாநகர்க்கு யாதைச் சாற்று கேன்"

எனப் புலவரே மகிழ்ச்சியை விளக்கத்திகைக்கும் போது நாம் எம்மட்டு ஆமாம், எமக்கு ஏற்படும் மகிழ்ச்சியும் உளக்கிளர்ச்சியும் சொல்லற்பாலதன்று.

"ஓடினாள், உள்ளமெலாம் உருகினாள், கருகிமேனி வாடினாள்" எனும் வீரக்கவிராசரின் கவியிலிருந்து தனயனை இழந்த தாயின் கதறலை அதாவது சோகத்தை அறிகிறோம்.

இலக்கியம் என்பது நவரசங்களை மட்டும் கொண்டது அன்று. அதிலே பக்தியும் காட்டப்பட்டு இருக்கின்றது. உதாரணமாக தில்லையிலே சிவதிரு உருவைக் கண்ட நாவுக்கரசர் பெற்ற அனுபவத்தில் இருந்தும் "பால் நினைந்து ஊட்டும் தாயினும் சிறந்தவன் நீ எனச்" சிவனை விளித்துப்பாடும் மாணிக்கவாசகரின் கூற்றில் இருந்தும் பக்தி புலப்படுகிறது. மேலும், சிவகாமியின் சபதத்திலே காதலித்தவனைக் கைப்பிடிக்கமுடியாமல் போகிறது ஒரு பேதைக்கு. அவளின் நிலையை நன்கு சித்திரிக்கின்றது அவ்விலக்கியம். அதாவது சிவகாமி சிவனை மணாளனாகக் கொண்டு தனக்குதானே தாலிகட்டி சிவன் சந்நிதியில் நடனமாடுகிறாள். அப்போது அங்குவந்த நரசிம்மப் பல்லவனின் வருகை சிவகாமியின் உள்ளத்தில் சிறிதளவு சஞ்சலத்தையும் ஏற்படுத்தவில்லை. உண்மையில் அவளுக்குச் சிவலிங்கத்தைத் தவிர வேறேதுவும் தெரியவில்லை. இது பக்தியின் முக்திநிலை. பக்தியைச் சுட்டும் இலக்கியம் முக்திக்குப் பாதையை காட்டும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

அடுத்து, செய்ந்நன்றி அறிதலை விளக்க கும்பகர்ணன் வருகிறான். "நீர்க்கோல வாழ்வை நச்சி நெடிது நாள் வளர்த்து என்னை போர்க்கோலம் செய்துவிட்டார்க்கு உயிர் கொடாது அங்கு போகேன்"

செய்ந்நன்றி அறிதலுக்கு வரைவிலக்கணம் கூறுகிறான். அறத்தை உணர்ந்த கும்பகர்ணன் என்னதான் போருக்குச் செல்லுமுன் "வென்றிவன் வருவன் என்று உரைக்கிலேன், பொன்றுவேன்" எனத் தன்னைப் போர்க்கோலம் செய்து விட்டவர்க்கு உரைப்பதில் இருந்து கூற்றையும் ஆடல் கொண்ட கும்பகர்ணன் குற்றத்தை உணர்ந்துதான் செருக்களம் சென்றான் என்பது தெரிகிறது. தோல்வி நிச்சயம் எனத் தெரிந்தும் தமையனுக்காகப் போரிட்டு உயிர் நீத்தான்.

தம்பிகளுக்கு எதிராகப்போர் செய்யாதே எனும் தாயின் கூற்றையும் மறுத்து நண்பனுக்கு உயிர்கொடுத்தான் ஒரு மாவீரன். பாரதப்போரிலே அம்மாவீரன் கர்ணனுக்கும் அருச்சுனனுக்கும் இடையில் போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அருச்சுனனுக்கு எதிராக நாக அஸ்திரத்தை கையில் எடுக்கிறான். தம்பியின் முடிவை நண்பனுக்காக நிர்ணயிக்கும் தமையனின் மனநிலை எவ்வாறு இருக்கும் என நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆனால் நாம் நினைப்பதைப்போல் அவனுள்ளத்தில் தம்பியின் மீது பரிவோ, பாசமோ இருக்கவில்லை. அம்மாவீரனின் உள்ளத்தில் உப்பிட்டவனுக்குத் தம்பியின் உயிரை அர்ப்பணிக்கும் எண்ணமே நிறைந்திருந்தது என்றால் மிகையாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து

"அகத்தூய்மை நீரான் அமையும் புறத்தூய்மை வாய்மையால் காணப்படும் என்பதற்கிணங்க

வாய்மை பண்பாளனை நோக்குவோமாயின்
"பதியிழந்தனம் பாலனை இழந்தனம் படைத்த
நிதியிழந்தனம் இனி எமக்கு உளது என நினைக்கும்
கதியிழக்கினும் கட்டுரை இழக்கிலோம்

என்கிறான். அவனுக்கு நாடோ, நிதியோ, மனைவியோ, மகனோ ஏன் வீடுபேறாகிய மோட்சமோ முக்கியமாகப் படவில்லை.

கொடையை எடுத்துக் கொள்வோமாயின் கொடுப்பதற்கு இல்லாத சமயம் இரப்போர் வந்து இரந்தபோது ஒரு வள்ளல் "அத்த நாள் வந்திலை அருந்தமிழ்ப்புலவோய்" என்கிறான் ஆக அவன் "இல்லை" எனக் கூறாது, கொடுக்க முடியாததற்கு வருந்தி தனது தலையையே கொடுக்கிறான். இது வெறும் புகழ்ச்சியல்ல. உண்மை இலக்கியமே ஆகும்.

அடுத்து, உடன் ஒட்டிப்பிறந்த கவசகுண்டலங்களையும் தானம்செய்து, இரப்போர்க்கெல்லாம் கொடுத்து சிவந்த கையனான கர்ணன் போர்க்களத்தில் அம்படிபட்டு கிடக்கிறான். அப்போது கண்ணன் அவனது தருமங்களைக் கிழப்பிராமணர் உருவத்தில் வந்து யாசிக்கின்றான். அப்போது கர்ணன் பகர்வதைப் பார்ப்போம். "ஆவியோ நிலையிற் கலங்கியது, யாக்கை அகத்ததோ புறத்ததோ அறியேன் ஓய்லாது யான்செய் புண்ணியம் அனைத்தும் நயக்கும் பக்குவம் தன்னில் வந்திலையால் உதவினேன் கொள்க நீ"

என்கிறான் மேலும் கண்ணன் கர்ணனை வரம் ஒன்று நயக்கும்படி வற்புறுத்த கர்ணன் அழிந்து கொண்டிருக்கும் தன்னுயிரைக் கேட்டானில்லை. இல்லை என்று இரப்போர்க்கு இல்லையென்னாது ஈந்தருள வேண்டும் என்கிறான். அதுவே கொடையின் சிகரம்.

அழகு இலக்கியங்களில் விளக்கப்படுமாற்றை நோக்கின்
"முருகு உண்டுவண்டு பயில்தார் நளன் வான்முகத்தை
பெரு விண்மதியம் நிகர் எய்தப் பெறாமை அன்றோ
கருதும் கமலத்து உறைதான்முகன் கைவருத்த
வகுதிங்கள் தோறும் புதிதாக வகுத்தல் செய்வான்"

என நளனின் அழகு விளக்கப்படுகிறது நைடதத்தில்.

ஆக, இலக்கியங்கள் அவற்றிலுள்ள கதாபாத்திரங்களுடன் நாம் அதாவது இல்லறத்திலுள்ளவர்கள் தம்மை ஒப்புநோக்க ஒரு சந்தர்ப்பத்தை நல்கும் அதேவேளை துறவறத்திலுள்ளவர்களது உள்ளத்துணர்ச்சிகளைக் கட்டுப்பத்தவும் உதவுகின்றன. கண்ணாடியின்றி எம்மை நாமே ஒழுங்கு செய்வது இலக்கியங்களைக் கற்காமல் நாம் எமது வாழ்வைச் சீர்ப்படுத்த நினைப்பது எனலாம். மொத்தத்தில் "இலக்கியங்கள் எமது வாழ்வுக்கண்ணாடிகள்" என்பதில் ஐயமில்லை.

உ. பானுகோபன்
ஆண்டு 12 B
(அதிமேற்பிரிவில் முதல் பரிசு)

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்-புன்கண்ணீர் பூசல் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன் மொழிகள்

யாம் அறிந்த புலவர்களிலே கம்பனைப் போல் வள்ளுவரைப் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங் கணுமே பிறந்ததில்லை உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை ஊமையராய் செவிடர்களாய் குருடர்களாய் வாழ்கின்றோம். ஒரு சொற் கேளீர்! சேமமுற வேண்டு மெனில் தெருவெலாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்!

கஷ்டத்திலும் நேர்மையாக இரு.
நீ ஏமாற்றப்பட்டாலும் பிறரை ஏமாற்றாதே.
உன் வாழ்விலேயே அதன் பலனைக் காண்பாய்.
தெய்வ நம்பிக்கை உன்னைக் கைவிடாது.

நண்பர்கள் மூவகையினர் பனை மரம் போன்றவர்கள், தென்னை மரம் போன்றவர்கள், வாழைமரம் போன்றவர்கள். பனை மரம் தானாகவே வளர்ந்து பலன் தருகிறது. தென்னையை நாம் நட்டு தண்ணீர் ஊற்றி வளர்ப்பது போன்றவர் இரண்டாவது வகை நண்பர்கள் மூன்றாவதாக. வாழையைப் போன்றவர்கள். எம்மிடமே எதிர்பார்த்து எமக்கு உதவி செய்பவர்கள். "மனச்சாட்சிக்குத் துரோகம் இழைப்பவன் மிருகத்தையும் விடக் கொடியவன்"

"காக்கை கரவா கரைந்து உண்ணும் ஆக்கமும்
அன்ன நீரார்க்கே உள"
இரையைக் கண்டதும் காக்கை தன் இனத்தை அழைத்துக் கூடி உண்ணும். அத்தகைய இயல்பினை உடையவர்க்கே சுற்றத்தால் வரும் நன்மைகள் உண்டாகும்.

"ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
இனத்தைப் பேணித் தவத்தைச் செய்"

"அறங் கூறா னல்ல செயினும் உருவன்
புறங்கூறா னென்றால் இனிது"
ஒருவன் அறம் செய்யாது பாவம் செய்யினும் புறங்கூறா னென்று பெயரெடுப்பது நன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செல்வம், காலிலுள்ள தூசிக்குச் சமம்.
இளமை காட்டாற்றின் வேகத்திற்குச் சமம்"
செல்வமும் செல்வாக்கும் படைத்திருக்கும் ஒருவனோடு முரண்டு கொள்ளலாகாது.

"வருந்தி அழைத்தாலும் வாராது வாரா பொருந்துவன போமினென்றால் போகா-
இருந்தேங்கி நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரம் நாம் நினைந்து துஞ்சுவதே
மாந்தர் தொழில்"
துயரங்களின் மூலம் அனுபவங்களைச் சேகரி
எள்ளைக் கொட்டினால் பொறுக்கி விடலாம்.
சொல்லைக் கொட்டினால் பொறுக்க முடியாது.

"அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை
இகழ்வாரைப் பொறுத்தல் தலை"
தன்னை அகழ்வாரையும் பூமி தாங்குகின்றது. அதுபோல், எம்மை இகழ்வாரையும்
நாம் பொறுத்தல் அறமாகும்.

சூரியனைப் பார்ப்பதற்கு விளக்குத் தேவையில்லையே.
சூரியனின் ஒளியிலேயே சூரியனைப் பார்க்கிறோம்.
கடவுளைக் காண நமக்குக் கடவுளின் அருள்தான் தேவைவேறு சாதனங்கள்.
தேவையில்லேயே!

ஒரு பெண்ணை நான் உயிருக்குயிராக நேசிக்கின்றேன். அவளுக்காக நான்
எதையும் அளிக்கத் தயாராக இருக்கின்றேன். ஆண்டவனிடம் செலுத்தும் பக்திக்கும்
இதற்கும் என்ன வித்தியாசம்? ஏன் இதையும் புனிதமாகக் கருதக் கூடாது?

குளிப்பதற்காக விழுவதென்றால் குளத்தில் விழ வேண்டும்
குளிக்கின்றேன் என்று கல்லிலே விழலாமா? தண்ணீர் வருமா?
காதலிக்கின்றேன் என்றால் கலியாணத்துக்கு வாய்ப்புண்டா?

காதலில் ஏற்படுகின்ற தோல்வி தங்கத்தோடு கப்பல் தாழ்வதைவிட மேலானது.

தொகுப்பு
அருட்சோதி. அருட்செல்வன்
ஆண்டு 13 A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைத் தமிழர் வழிபாடு
## (சிறப்புக்கட்டுரை)

*நிலம் நீர் தீ வளி விசும்போடைந்து*
*கலந்து மயக்கம் உலகம் (தொல்காப்பியம் பொருள் மரபியல் 87)*

நிலம், நீர், காற்று, விண் ஆகிய இயற்கைப் பொருட்களை தெய்வமாகவும் இறையருள் கொண்டவையாயும், தமிழர் போற்றி வழிபட்டு வந்ததை பழைய வரலாறு காட்டும். மனிதனின் அன்றாட வாழ்வுக்கு அடித்தளமாகவும், நிலைக்களனாகவும் விளங்கும் நிலத்தை பெண் தெய்வமாக வழிபடும் மரபு இருந்தது. இதனைத் திருக்குறள்,

"நிலனென்னும் நல்லாள்" (திருக்குறள்: உழவு – 10)
எனவும், சிறுபாணாற்றுப்படை
"மாநில மடந்தை"..... (சிறுபாண் : 1)
எனவும், மதுரைக் காஞ்சி
"ஐம்பாற்றிணையுங்கவினி"... (மதுரைக் காஞ்சி: 326)
எனவும் கலிங்கத்துப் பரணி
"நிலமகளை அண்ட காக்கும்" (கலி.பரணி 6)
மணிமேகலை,
"மாநில மடந்தைக்கு (மணி:பதிகம் 6)
எனவும் தொல்காப்பியம்,
"தவலருஞ் சிறப்பினைந் நிலம் பெறுமே" (தொல்காப்பியம்: பொருள்)
எனவும் இருக்கு வேதம்
"ப்ருதிவீ மாதர மிமாம்...."
எனவுங் காட்டும்.

பழந்தமிழர் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என நிலத்தை, ஐந்திணை எனப் பாகுபடுத்தியிருப்பதை இருக்கு வேதம் " பஞ்சஜநா" எனவும் 'பஞ்சபூமா' எனவும் பஞ்சக்ஷிதய எனவும் பல இடங்களில் காட்டியிருப்பது நோக்கற்பாலது. இதனையே,
புறநானூறு
"மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதை வரு வளியும்
வளிந்தலை இய தியும்
தீ முரணிய நீருமென்றாங்
கைம்பெரும் பூதத்தியற்கை (புறநானூறு 1-5)
எனக் காட்டும்.

நீரையும் ஓர் இறையம்சமாக ஏற்று அதற்குக் காரணமாக இந்திரன் வருணன் ஆகியோரை கடவுள் வடிவமாக இருக்கு வேதம் காட்டும். நீரையும் நீரைக் கொட்டும் மேகத்தையும் புறநானூறு
"எல்லா வுயிர்க்கும் ஏமமாகிய நீர்" (புறம், கடவுள் வாழ்த்து)
எனப் போற்றிப் புகழ்கின்றது.
இளங்கோவடிகள்,
"மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்" (சிலப்பதிகாரம் மங்கல வாழ்த்து – 7)
எனக் காட்டுகிறார்.

புறநானூறு, குறவர், மழை தேவைப்படுங் காலத்தில் மழை வேண்டியும், மழை தேவையில் லாத காலத்தில் மழை ஒழித்தலுக்கும் கடவுளை வேண்டுவதை.
"மலையான் கொள்கென வுயிர் பலி தூடப்
மாரியான்று மழைபேக் குயர் கெனக் கடவுற் பேணிய குறவர்... (புறநானூறு:143)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் காட்டும். இதற்காக இந்திரனை வழிபடுவர். இதனைத் தொல் காப்பியம்,
"வேந்தன் மேய தீம்புன லுலகமும் (தொல்காப்பியம் அகம் 5)
சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இந்திரனுக்கு விழா எடுத்தல் பற்றி விரிவாகக் கூறுகின்றன. மழை வேண்டி சசிதேவனை வழிபடுதல் மரபாகக் கூறப்படுகின்றன.

ஆகாய வெளியில் உள்ள விண்மீன்களையும் வழிபாடு செய்த மரபை தமிழ் இலக்கியங்கள காட்டும்.

கலித்தொகை,
"வடமீன்போற் றொழுதேத்த" (கலித்தொகை:1-22)
எனவும் சிலப்பதிகாரம்,
"சாலி யொரு மீன்" (சிலப்பதிகாரம்:1-51)
எனவும், "நபன்மீன் நாளையொரு பாற்கதிர் பரப்பி" (சிலப்பதிகாரம்)
எனவும் அகநானூறு
"அறு மீன் சேரும்... (அகநானூறு)
ஆகாயம் பரந்து அண்டமாக இருப்பதையும் அதில், ஞாயிறு, திங்கள், பல்வேறு நட்சத்திர இருப்பதையும் அவற்றையும் வழிபடுவதையும் தமிழ் இலக்கியங்கள் கூறும்.
திருமுறுகாற்ருப்படை
"பலர் புகழ் ஞாயிறு" (திருமுருகாற்றுப்படை:2)
எனவும், நற்றிணை,
"முந்நீர் மீமிசைப் பலர்தொழர் தோன்றி
யேமுற விளங்கிய சுடர்," (நற்றிணை:27)
எனவும், அகநானூறு,
"தயங்குதிரைப் பெருங்கட லுலகுதொழத் தோன்றி
வயங்குதிர் விரிந்த வுருகெழ மண்டிலம் (அக:263)
எனவும், சிலப்பதிகாரம்,
ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும் (சிலப்பதிகாரம் மங்கல வாழ்த்து எனவும்
"உலகு தொழ மண்டிலம்"
எனவும் கூறித் திங்களைப் போற்றித் துதித்துப் பாடுவதும் மரபாக உள்ளது. குறுந்தொகையில்
"தொழுது காண் பிறையிற்றோன்றி எனவும் (குறுந்தொகை:178)
எனவும் செவ்வாய் வானத் தையணத் தோன்றி யின்னும் பிறந்நன்னு பிறையே (குறுந்தொகை 302)
எனவும் அகநானூறு
"ஒள்ளிழை மகளிர் உயர்பிறை தொழஉம்
புல்லென் மாலை..."
எனவும் , திங்கள் துதிக்கப்படுகின்றது.

தீ அக்னி பகவான் எனப போற்றிப் புகழப்படுவது பண்டு தொட்டு மரபாக உள்ளது. அதனைப் பரிபாடல்,
"தீ யுனுட் டேறல் நீ" (பரிபாடல் 3)
எனவும், சிலப்பதிகாரம்,
"எரியங்கி வானவன்..." (சிலப்பதிகாரம்: வஞ்சி மாலை-49)
எனவும் பரிபாடல்,
மூன்றினுண்குந் தீயுநீயே !(பரிபாடல் 3)
எனவும், வேள்வி யாகம் என இந்து சமய வேதத்தில் பலவாறு விவரிக்கப்பட்டுள்ளது.

காற்றை, வாயு பகவான் எனப் புராணங்கள் கூறும்.
பரிபாடல்,
"இரண்டி னுண்ரும் வளியும் நீயே" (பரிபாடல் 3)
எனக் காற்றைக் கடவுளாகக் காட்டும்.
புறநானூற்றில்"
நணியிரு முந்நீர் நிரிவர்யோட்டி
வழிதொழி லாண்ட வுவோன் மருக (புறநானூறு 66)
எனக் காட்டியிருப்பதும் நோக்கற்பாலது.

பா.சி. சர்மா B.sc (Cey) Dip in Ed (Cey)
(அதிபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*விழா சிறப்புற அமைய சகல வழிகளிலும் எமக்குதவிய அன்பு நெஞ்சங்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்!*

❊ அன்புடனே எமது அழைப்பினை ஏற்று பற்பல சிரமங்களுக்கு மத்தியிலும் விழாவிற்கு வருகை தந்த முதன்மை விருந்தினர் பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்களுக்கும்,

❊ உவகையுடனே விழா சிறப்புற நடந்திட கதிரேசன் மண்டபந்தனை தந்துதவியதுடன் விழாவிற்குச் சிறப்பு விருந்தினராக வருகை தந்த திரு. இராமபழனியப்பச் செட்டியார் அவர்களுக்கும்,.

❊ பெரும் ஆதரவினை வழங்கி முத்தமிழ்விழா சிறப்புற மேடையேற வழியமைத்த எம் கல்லூரி முதல்வர் திரு. பா. சி. சர்மா, உப அதிபர்கள் திரு. த. இராஜரட்ணம், செல்வி சா. வேலுப்பிள்ளை ஆகியோருக்கும்,

❊ இனிய முகத்துடன் எமது விழா நிகழ்ச்சிகள் தரச்சிறப்புடனும் தனித்து வத்துடனும் மிளிரும் வகையில் பெரும் உதவிகள் நல்கிய பொறுப்பாசிரியர்கள் திரு. க. சேய்ந்தன், திருமதி. த. மாணிக்கராஜா, எம்மை வழி நடாத்துகின்ற ஏனைய ஆசிரிய திலகங்களுக்கும்,

❊ முத்தமிழ்விழா முதன்மைபெற "ஈகைக்குணத்திலே எமக்கு யாரும் நிகரில்லை" என்ற விதத்தில் ஆதரவு நல்கிய தமிழ்ப்பெருமக்களுக்கும்,

❊ "முயற்சி திருவினையாக்கும்" என்பதற்கிணங்க விழா சிறப்புற வேண்டுமென்னும் நோக்குடன் தோளோடு தோள் கொடுத்துதவிய மாணவத்தோழர்களுக்கும்,

❊ அனைவர் பாரட்டையும் பெறும் வண்ணம் விழா நிகழ்ச்சிகளை தயாரித்துதவிய ஆசிரியக்கலைஞர்களுக்கும்,

❊ மயக்கும் மாலைப்பொழுதினிலே விழா சிறப்புடனே நடந்திட சிறப்பான முறையிலே ஒத்துழைப்பு நல்கிய மாணவதலைவர்கள், பாதகாப்பு உத்தியோகத்தர்களுக்கும்,

❊ படித்து பாதுகாக்கும் வண்ணம் இத்தமிழ் தீபத்தினை குறுகிய காலத்தில், கலைநயம் மிளிரும் வண்ணம் அச்சேற்றித் தந்திட்ட எக்ஸ்போ பிரிண்டாஸ்சுக்கும்,

❊ விழாவிற்கு வருகை தந்த தமிழ்நெஞ்சங்களுக்கும்,

**எம் இதயங்கனிந்த நன்றிகளை உரித்தாக்கி விடைபெறுகின்றோம்.**

தமிழ் மாணவர் மன்றம்
இந்தக்கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by: **Expo Printers (Pvt) Ltd:** 144, Pickerings Road, Colombo 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org